அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

12 பக்கம்

16 காசு

ஒலி - 3 | 10-5-'63 வெள்ளி | [illegible] - 9

"...அரசியல் சட்டத்தின் கீழ் ஆட்சி நடைபெறவில்லை, ஆட்சியின் கீழ் அரசியல் சட்டம் அலங்கோலமாகிறது!" என்று தோழர் இரா. செழியன் குறுப்பிட்டபோது, பார்லிமெண்டில் நிசப்தம் நிலவியது. அன்று செழியன் பேசிய ஆதாரபூர்வமான பேச்சைக் கேட்டப்பலர், 'தி. மு. க, வின் ஆட்கள் பார்வைக்கு இளைஞரே ஒழிய பெரிய அரசியல் வாதிகள்' என்று புகழ்ந்தார்கள். உண்மையில் செழியன் அடுக்கடுக்காய் அழகான ஆங்கிலத்தில் ஆதாரங்களைக் காட்டிக் காட்டிப் பேசியபோது, கேட்டு கொண்டிருந்த எங்களுக்கெல்லாம் உணர்ச்சியாயிருந்தது. தோழன் மனோகரன் இந்தி எதிர்ப்புப் பற்றிப் பேசினர்!தோழர் செழியன் தடைச் சட்டம் பற்றிப் பேசினர்!! பார்லிமெண்டில் இந்தத் தொடர்க் கூட்டத்தில், இந்த இரு பேச்சுகளுமே கணீர்! கணீர்! என்று ஒலித்தன. மனோகரன் பேசியபோது சபையே லயித்துக் கிடந்தது. ராஜ்யசபையில், அண்ணாவின் பேச்சு, இவைகளுக்கு மணிமகுடமாய் அமைந்திருந்ததுதரன் எல்லோருக்கும் தெரியுமே!! பிறபின்.........

⁂ ⁂ ⁂

—என்று வந்தது கடிதம், டில்லியிலிருந்து! செழியன் அவர்களுடைய பேச்சையும் படித்தபோது ஆகா!வென்று பெருமிதம் கொண்டேன். பேச்சுரிமையைப் பறிக்கும் டில்லியின் சட்டம் பற்றி அவர் குறிப்பிட்ட சில ஆதாரங்களை இதோ, பாருங்கள்:

"அரசியல் சட்டத்தை அழிக்கவல்ல சக்தி அரசியல் சட்டத்திலேயே பொதிந்து கிடக்கிறது. நாம் கண்காணிப்பாக இல்லாவிட்டால், என்றைக்காவது ஒருநாள் அரசியல் சட்ட முறைப்படியே பலமான ஒருவர் ஆட்சிப் பீடத்தை அடைந்து, அதற்குமுன் அரசியல் சட்ட விதிகளைப் பயன்படுத்தியே எதேச்சாதிகார ஆட்சியை ஏற்படுத்தி, மக்களை மீண்டும் அடிமை

நிலைக்குத் தள்ளிவிடக்கூடும். அப்படிப்பட்ட நாள் வரவேண்டுமென நான் விரும்பவில்லை. ஆனல் அத்தகைய அபாயநிலை அரசியல் சட்டப்படியே உருவாக வழி இருக்கிறது. மிக நீண்ட காலமாகப் போராடிப் பெற்ற சதந்திரம் முடிந்து மீண்டும் அடிமை வாழ்வுதுவங்கக்கூடிய அவலநிலை உருவாகக் கூடும்."

நீதிபதி கனம் சுப்பாராவ் அவர்கள் பலமான ஒருவர் எதேச்சாதிகார ஆட்சியை" ஏற்படுத்த முடியும் என்பது "பலமான ஒரு கட்சிக்கும்" பொருந்துவதாகும்.

சென்னைப் பட்டமளிப்பு விழா சொற்பொழிவில் வேறொரு கட்டத்தில் கனம் சுப்பாராவ் அவர்கள் கூறுகிறர்,

நமது உரிமைகள் பறிபோகும் பொழுது உரிமைகளைப் பறிப்பவர்கள் வெளிநாட்டினரா, அல்லது உள் நாட்டினரா என்பதில் அர்த்தமில்லை; வெளிநாட்டினராயிருந்தாலும் உள் நாட்டினராயிருந்தாலும் அடிமை நிலைமை அடிமை நிலைதான்!

அமெரிக்க நாட்டு அரசியல் சட்டத்தில் ஒரு விதி சேர்த்து வைத்தார்கள். அதாவது அமெரிக்க பாராளுமன்றம், பேச்சுரிமையைக் குறைக்கும் விதத்தில் எந்த வகையான சட்டத்தையும் கொண்டு வரக்கூடாது!" என்பதாகும். அமெரிக்கக் குடியரசில் எந்தக் கட்சி பீடத்திற்கு வந்தாலும் சரி, அதற்கு எவ்வளவுதான் பெரும்பான்மை பலமிருந்தாலும் சரி, பேச்சுரிமையை மட்டும் தொடமுடியாது,

அமெரிக்க மேலுயர் நீதிமன்ற நீதிபதி ஜாக்சன் என்பவர், ஒரு தீர்ப்பில் குறிப்பிட்டதை முன் வைக்க விரும்புகிறேன். அவர் கூறினர்.

"முக்கியமில்லாத பிரச்சினைகளில் பேச்சுச் சுதந்திரம் வழங்குகிறேம் என்று கூறுவது அர்த்தமாகாம். அது சுதந்திரமல்ல, சுதந்திரத்தின் நிழல், பேச்சுச் சுதந்திரம் தரப்பட்டிருக்கிறது என்பதற்கு உறுதியான எடுத்துக் காட்டு, நடைமுறையிலிருக்கும் அமைப்பையே ஆட்டி வைக்கக் கூடிய உயிர் நாடியான பிரச்சினைகளிலும் அந்தப் பேச்சுரிமை தரப்பட்டிருக்கிறதா என்பதுதான்."

(6-பக்கம் பார்க்க)

காகிதக் கோர் கட்டுகிறது

"எங்களது குரல் இன்னும் சில ஆண்டுகளில் ஐக்கிய நாடுகள் சபையிலும் கேட்கும்"

என்று அண்ணா அவர்கள் சொன்ன போது, ஆ! ஊ! இதுகளாவது! ஐ. நா. மன்றம் போகவாவது! என்று எரிச்சலோடு எழுதித்தன்ஆசையைத் தீர்த்துக் கொண்டது,'விடுதலை' ஏடு.

அதை எழுதிய அண்ணன் குருசாமி இப்போது அதே 'விடுதலை' ஏட்டார் மீது எரிச்சலைக் கொட்டிக் கொள்ளும் ஆசாமியாக மாறியிருக்கிறரே யொழிய, நாம் எதிர் பார்த்த கட்டங்கள் எதிர்பாரா வேகத்தோடு நமது கழகத்துக்கு வந்து கொண்டேயுள்ளன.

யாரே எதிர் பார்த்தோம்! பண்டித நேரு அவர்கள் நமது அண்ணனின் குரல் கேட்டு, அதற்குப் பதில் சொல்லும் காலம் இவ்வளவு சீக்கிரம் வருமென்று!! யாரேனும் எண்ணினேமா, மனோகரன் மார்பு தட்டி நின்று டில்லிப் பட்டணத்தின் அதிபர்கள் மத்தியிலே அதட்டிப் பேசும் அந்நாள், இவ்வளவு விரைவில் வரும் என்று!' அண்ணாதுரை ஆல்சோ ஸ்போக்' (அண்ணாதுரையும் கூடப் பேசினர்) என்று ஒரே வரியில் போடுகின்ற 'இந்து' ஏட்டின் முதல் பக்கத்தில், கொட்டை எழுத்தில் அல்லவா காட்சி தருகின்றது நமது பிரச்னை! 'அண்ணாதுரையின் எச்சரிக்கை'. 'அண்ணாதுரையின் கண்டனம்', என்றல்லவா, தலைப்புகள் போடப்பட்டுத் தரப்படுகின்றன, செய்திகள். மனோகரனுடைய பேச்சைத் 'தரமான' உயர் தன்மைப் பேச்சு என்கிறது, இந்து!!

இந்த விமரிசனங்களைக் கேட்டு வெட்கித் தலைகுனிந்து, பொருமிப் பெருமூச்சு விடும் பிம்பங்களை அறிவோம். அவை கிடக்கட்டும்! செய்திகளைப் படிக்கும் போது இன்பத் தேனன்றே வந்து பாய்கிறது, நம் செவிகளில். அரூர்முத்து, கேட்கிறர், பார்லிமெண்டில், "ஆல் இண்டியா ரேடியோ" என்பதற்குப் பதில், "ஆல் இண்டி ரேடியோ" என்று வையுங்கள் என்று. கந்தப்பன் விடவில்லை, இந்தி வாலாக்களை, இடைமறித்து, இடைமறித்து நமது கண்டனத்தைக் கொட்டியிருக்கிறர். ராஜாராம், பார்லிமெண்டின் மதிப்பீட்டுக் குழுவின் 14 உறுப்பினர்களில் ஒருவராக, நாம் எட்டே எட்டுப் பேரிருந்தும், தென்னகப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப் படுகிறர்! செழியன் பேசியுள்ள பேச்சு, அப்பப்பா, நமது கண்ணியத்தின் சின்னம்; நமது அறிவியகத்தின் அளவு கோல் என்று போற்றுகின்ற அளவுக் கன்றே உள்ளன. சிவசங்கரனும், இராமபத்ரனும், தர்மலிங்கமும் மற்றும் தி. மு. க. உறுப்பினர்களும் இந்தி மசோதாவைக் கண்டித்து வெளியேறிய செய்தி உலகெங்குமன்றே ஒரே ஒரு நாளில் பரவுகிறது!!

கார்ப்பரேஷனில் மேயரை அமர்த்திப் பார்த்தோம்—சென்னைச் சட்டமன்றில் எதிர்க் கட்சியாக அமர்ந்தோம்—இதோ, நம்மை யார் என்று மாற்றர் அறியவும், நமது மதிப்பையும் தன்மையினையும் நேருவும் பிறரும் உணரவுமான வாய்ப்பு, இத்திங்கள் கிடைத்திருக்கிறது!!

"அண்ணாதுரை இந்தியா சம்பந்தமாகச் சொன்ன கருத்தை நான், ஒப்புக் கொள்கிறேன். இந்தியா, பல மொழிகள் கொண்டது தான்," என்கிறர், பண்டித நேரு.

"அண்ணாதுரை என்னைப் பற்றிச் சொன்ன நல்லுரைகளுக்கு எனது ஆழ்ந்த நன்றிகள்", என்கிறர் லால் பகதூர் சாஸ்திரி.

ஏடுகள் புகிழ்கின்றன! பூபேஷ்குப்தாவுக்கு அண்ணா கொடுத்த அன்புரையும், 'தமிழ் நாடு' எனும் பெயர் மாற்றத்தில் என்ன இருக்கிறது என்று கேட்டவர்களுக்குச் சுடச் சுட—'குடியரசுத் தலைவரை' ஏன் 'ராஷ்டிரபதி' யாக்கினீர்கள்? அதில் உங்களுக்கு என்ன இருக்கிறதோ அதுதான் தமிழ்நாடு பெயர் மாற்றத்தில் எங்களுக்கும் இருக்கிறது, என்று அண்ணா 'பட்'டெனச் சொன்ன பதிலும், எல்லாப் பத்திரிகைகளிலும் வருகின்றன!!

இரண்டு தினங்கள்; முதல் நாள், இந்தித் திணிப்பு மசோதா; இரண்டாம் நாள், தமிழ் நாடு பெயர் மாற்றத் தீர்மானம்—இவைகளின் மீது அண்ணா பேசப் பேசச் சபையே மகுடி கேட்ட நாதமாகயிருந்ததாம்! மனம் விட்டு வெளிப்புடையாக அனைவரும் பேசிக் கொண்டார்களாம், "ஆகா! அண்ணாதுரை நன்ருகப் பேசுவார் என்று கேள்விப் பட்டிருந்தோம். ஆனல், அவரைப் போல இந்தியாவிலேயே

ட்டை டில்லி!



அறிஞர் அண்ணா அங்கத்தினராகயிருக்கும் ராஜ்ய சபை இதுதான்! இம்முறை இங்கே அண்ணா பேசிய பேச்சுகள் எதிர்காலச் சரித்திரத்தில் இடம் பெறும்!- என்கிருர்கள், கேட்டவர்கள்.

சிறந்த பேச்சாளியில்லை'', என்று.

நமது அண்ணனுக்கு இனிமேல் தான் மற்றவர்கள் பட்டமும் பாராட்டும் தர வேண்டுமென்பதில்லை! உலகத்திலுள்ள உத்தமர்கள் எங்கே இடம் பெற வேண்டுமோ அந்த மக்களுடைய இருதயங்களில் இடம் பெற்று விட்ட அவருக்கு இப்பாராட்டுரைகள் மிகமிகச் சாதாரணமே!!

எனினும், ஒரு காலத்தில் நமது கழகம் 'கனவுகள்' எனக் கருதியதெல்லாம் நனவுகளாகின்றன, இன்று.

நாளாகும் இப்படியெல்லாம் நடக்க என்று எண்ணியதெல்லாம் நம்மையறியாமலே விரைந்து கொண்டு வருகின்றன.

படிக்கப் படிக்க, நினைக்க நினைக்க, ஆடுவோமே! பள்ளுப் பாடுவோமே! என்று ஆனந்தத்தோடு கூவச் சொல்கிறது. அகமெல்லாம், காணுததைக் கண்டது போல் களிப்புறுகிறது இதன் முக்கியத்தை மூர்க்கன் அறியான்! வம்பன் குறைத்தே பேசுவான்!!

'சர்'களுக்கும் 'மேதாவி'களுக்கும் இவை சாதாரணமாக யிருக்கலாம். நமக்குக் கூட எதிர் காலத்தில், இவை சாதாரணமாகி விடக் கூடும். ஆனல், மிகமிகக் குறைந்த காலத்தில் நாமெல்லாம் ஈடுபட்டிருக்கும் ஒரு அரசியல் இயக்கத்தின் செல்வாக்கு அகில இந்தியாவிலும் பரவியிருக்கிறது, அஞ்சுகின்றனர் வடவர், மாற்ருர் தி.மு.க. என்ன சொல்கிறது என்று கேட்கின்றனர் எனின் அதன் அருமையை சாமான்யர்களான நாம் மட்டுமே உணர முடியும்! அதனுற்ருன், இதயம் களிக்கின்றது! இறும் பூதெய்துகின்ருேம்!!

"ஏடா! மூடா! களிக்க வேண்டிய காலமா. இது? கட்டாயமாக இந்தித் திணிக்கப் பட்டிருக்கிறது. அழுவாயா? களிப்பேன் என்கிருயே!!''

''உனக்குப் புத்தியாயில்லை? உன் கழகத்தையேத் தடுக்க, சட்டம கொண்டு வந்திருக்கிறது டில்லி. அதைப் பற்றி ஆழமாக யோசனை செய்யாமல் ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே என்றழைக்கிருயே, உனக்கென்ன பித்தமா?'' என்று சிலர் கேட்கக் கூடும்!

எப்போதும் வீரன் எதிரியின் அம்புகளைத் தான் வரவேற்பான்! அப்போது தானே அவனுக்கும் தன்னுடைய வீரத்தைக் காட்ட வாய்ப்புக் கிடைக்கும்!!

இந்தி திணிப்புச் சட்டமும், அரசியல் சட்டத் திருத்தமும்- நிச்சயம், வருத்தப்பட வேண்டிய, வேதனையான சட்டங்கள் தான்.

அவைகளை டில்லி அரசு கொண்டு வராமலிருந்திருக்குமே யானுல். நாம் அவர்களுடைய ராஜதந்திரத்தைக் கண்டு கவலைப்பட்டிருக்கலாம்! ஆனல், எரிகின்ற தீக்கு எண்ணெய் ஊற்றுவது போல, இச்சட்டங்களைக் கொண்டு வந்து, நமது உணர்ச்சிகளை உருவாக்கி விட்டிருக்கிருர்கள்!!

உலகம். தி.மு.க.வை இன்று கூர்ந்து கவனிக்கிறது அமெரிக்காவும். பிரிட்டனும், மாஸ்கோவும், சீனுவும் லால்பகதூர் சாஸ்திரி அண்ணுவுக்குத் தந்த பதிலை ஊன்றிக் கவனித்துப் படிக்காமலாயிருக்கும்? அந்தப் பேச்சு, ஏடுகளில் வந்த மாலையில், சீனத் தலைவர் மாசேதுங்கும் சீனப் பிரதமர் சூஎன்லாயும் சந்தித்தால் என்ன பேசிக் கொள்வார்கள்.

மா:- சூசூ! பார்த்தாயா இந்தியாவின் உள்நாட்டு அமைச்சர் வீரத்தை...... எச்சரிக்கை விடுத்திருக்கிருர் எச்சரிக்கை!

சூ:- யாருக்கு! நமக்கா?

மா:- இல்லை இல்லை! இந்தியாவின் தென் பகுதியிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு.

சூ;- அப்படியா! என்ன எச்சரிக்கை?

மா:- அவர்களை ஒரு கை பார்த்து விடுவாராம்— அவருடைய அரசாங்கம் அஞ்சாதாம்— வீரமாகப் பேசியிருக்கிருர்.

இப்படி; தானே கேலிப் பேசுவர்! அமெரிக்கக் கென்னடியும் பிரிட்டிஷ் மாக்மில்லனும் என்ன நினைப்பார்கள்? விடோம்! வேகமாக முறியடிப்போம்! என்று சீனுக்காரனைப் பார்த்து லால்பகதூர் எச்சரிக்கை விடுத்திருப்பாரானுல், பொருத்தம்; பொருளுமுண்டு. ஆனல், அவர் நமக்கு விடுக்கிருர் எச்சரிக்கை! இந்தித் திணிப்பினை ஏற்காவிடில்...... என்று எச்சரிக்கிருர்! நேரடி நடவடிக்கை எடுத்தீர்களேயானுல்... என்று கொக்கரிக்கிருர்!!

எல்லையிலே மாபெரும் எதிரியை விரட்ட வேண்டிய நேரம்; தொல்லைதரோம், உம்மோடு தோளோடு தோளிணைந்து போரிடுவோம் என்று தி.மு.க. உறுதி மொழி சொன்னவேளை; பண்டிதரின் தலைமையிலே இயங்கும் ஓரரசு, உள்நாட்டிலே பிரச்னைகளை உண்டாக்கிச் சவால் விடுகிறது என்ருல் வெளி நாட்டுக் காரர்களுக்கு அந்த ஆட்சியின் போக்குபற்றி ஐயம் ஏற்படத் தானே செய்யும்.

லால்பகதூர் கெஞ்சுகிருர்! குழைகிருர்! பிறகு சவால் விடுகிருர், கழகத்தைப் பார்த்து!!

அவருடைய தகுதிக்கு இழுக்கு; ஆனல் கழகத்துக்கு நிச்சயம் அது ஒரு பெருமை தான்.

44 கோடி மக்களைக் கட்டியாளும் ஓரரசு, 70 கோடி மக்கள் வாழும் சீனரை எதிர்க்கும் அந்த அரசு, சவால் விடுகின்ற அளவுக்குக் கழகத்தின் லட்சியங்கள் வளர்ந்து விட்டன என்பதைத் தானே அவை குறிக்கும்.

விரும்பாத மக்கள் மீது வேண்டாத சட்டங்களைப்பிறப்பிக்கும் எந்த அரசு தான் திமிரோடு சவால் விடாமல் இருந்திருக்கிறது!!

"நான் சார்ந்திருக்கும் கழகத்தின் சார்பில் மட்டுமல்ல தமிழகத்தின் தூதுவன் என்கிற முறையிலும் எச்சரிக்கிறேன். இந்தியைத் திணிக்காதீர்கள். இந்தியை எதிர்க்கும் நான் தனிநபரல்ல, எனக்குப் பின்னல் தமிழகமே இருக்கிறது'', என்று அறிஞர் அண்ணா அவர்கள் வெளியிட்ட பிறகும், எச்சரிக்கிருர் அமைச்சர்,

"ஆங்கிலத்தை இப்போது அகற்றக் கூடாது! என்பதற்காகத் தான் இச்சட்டம். நம்புங்கள் இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரையில்

வாபஸ் பெற முடியாதா!

கிழக்குப் பாகிஸ்தானில் வாழுமக்கள் பாகிஸ்தான் மத்திய அரசு திணிக்கும் உர்தூ மொழியை எதிர்த்தனர். வங்காளம் எமது சொந்த மொழி! அதை விட்டு உர்தூ ஏன்?—என்று கேட்டனர். டாக்காவில் இக்கிளர்ச்சி 1955 ஜுலையில் பெரியதோர் இயக்கமாயிற்று. மாணவர்கள் திரண்டெழுந்தனர். கிழ்பாகிஸ்தான் சர்க்கார் தடியடி, கண்ணீர்புகை ஆகியவைகளை நம்பியது. "ஐக்கிய பாகிஸ்தானம் உருவாக ஒரே மொழி தேவையன்ருே? அண்டைநாடு இந்தியா மிரட்டும்போது நமக்குள் மொழிப் போராட்டமா?'', என்று பாகு மொழி பேசிற்று மத்திய அரசு. கிழக்குப் பாகிஸ்தான் இஸ்லாமியர் கேட்கவில்லை, போர்! போர்! என்றனர், கடைசியில் மத்திய அரசு உர்தூவைப் புகுத்துவது என்கிற உத்தரவை வாபஸ் பெற்றது. இது பாகிஸ்தானில்! இங்கோ............!?

ஆங்கிலம் இருக்கும்,'' என்கிறார் பண்டித நேரு.

"ஆமாம்! ஆமாம்!! அதற்காகத் தான் இச்சட்டம். இது தெரியாமல் எதிர்ப்போம் என்கிறார்களே''. என்று இங்கிருந்த படியே தாளம் போடுகிறார், பக்தவத்சலம்.

சட்டம் நமக்குச் சாதகம் தரவா, கொண்டு வரப் பட்டிருக்கிறது. இல்லை! இல்லை! முக்காலும் இல்லை!!

பத்தாண்டு காலத்தில் படிப்படியாக இந்தியைத் திணிக்க வழி செய்கிறது.

நாளை முதல் எல்லாச் சட்டங்களிலும், எல்லா இடங்களிலும், இந்தி 'படிப்படியாக' என்னும் போர்வையில் நுழையப் போகிறது.

ஒளிவோ மறைவோயில்லை! உறுதியாகப் பண்டித நேரு அவர்களே தெரிவித்து விட்டார், இந்தி தான் இந்தியாவின் தேசீய மொழி என்று.

எப்படிக் கொண்டு வருவது, எந்தெந்த வழிகளில் இந்தியை நுழைப்பது, என்பதற்குத் தவணை கேட்கும் சட்டமே தவிர, இந்தியே வராது என்று உறுதி மொழி யளிக்கஅல்ல இச்சட்டம்.

நாம் விரும்புவது இந்தியே வராது என்கிற உறுதி மொழியைத்தான்! அரசியல் நிர்ணய சபையில் இந்தி தேசீய மொழியாக உட்கார்ந்தது, ஒரே ஒரு ஓட்டு மெஜாரிடியில் தான்.

ஒரே ஒரு ஓட்டில் நிறைவேற்றப்பட்ட விதி இந்தத் துணைக் கண்டத்தின் 44 கோடி மக்களையும் கட்டுபடுத்தும்! என்கிறது, டில்லி.

ஐக்கிய மாகாணம், மத்ய பிரதேசம், பீகார், ராஜஸ்தான்-ஆகிய பகுதிகளில் மட்டுமே பேசப்படும் மொழி, இந்தி. அது, பிற மாநிலங்களின் தலையில் சுமத்தப்படுகிறது! அதனை எப்படிச் சுமத்துவது என்பதற்குத் தான் இச்சட்டம்!!

உடனே சுமத்து! உடனே சுமத்து!! என்கிறார்கள் இந்தி வெறியர்கள். சுமத்தினால் என்ன நடக்கும்? மாகாணங்களும் மத்ய அரசு, தங்கள் கடிதப் போக்குவரத்துகளை இந்தியில் தான் நடத்த வேண்டும் என்கிற நிலை உடனே வந்தால் காமராசர் என்ன செய்ய முடியும்?

இங்கிருக்கின்ற அரசாங்க முதல் காரியதரிசி செட்டூர் என்ன செய்வார்? நமது அதிகாரிகள் எப்படி டில்லிக்கு இந்தியில் கடிதம் எழுத முடியும்? அமைச்சர் பக்தவத்சலம், டில்லியிலிருந்து இந்தியில் ஒரு கடிதம் வந்தால் எப்படிப் புரிந்து கொண்டு பதில் எழுதுவார்?

இவர்கள் மட்டுமல்ல இன்றைய தினம் குடியரசுத் தலைவராயிருக்கும் டாக்டர் இராதாகிருட்டினனே, இந்தியை உடனே சுமத்தினால், வருகின்ற கடிதத்தைப் படிக்கவும், பதில் எழுதவும் முடியாதே! அவருக்கே இந்தி தெரியாதே!!

அப்படிப் பட்டவர்களுக்கு இச்சட்டத்தின் மூலம் எச்சரிக்கை தரப்பட்டிருக்கிறது, "இன்னும் 10 வருடங்களுக்குள் படிப்படியாக எல்லாக் காரியங்களையும் இந்தியில் நடத்தும் தகுதி பெறுங்கள்'', என்று.

உடனடியாக இந்தி! என்றால், திராவிட முன்னேற்றக் கழகம் கோருகின்ற பிரிவினையை, பக்தவத்சலமும், காமராசருமே கேட்க ஆரம்பித்து விடுவார்கள். அந்தப் பயத்தாலேயே டில்லி இப்படி 10 ஆண்டுத் தவணை தருகிறதே ஒழிய வேறல்ல.

தன்னுடைய மொழி ஆதிக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள 10 வருடத் தவணையே ஒழிய, இந்தி தேசீய மொழியாகக் கூடாது என்கிற தென் மாநிலங்களின் விருப்பத்தை நிறைவேற்ற அல்ல!

இந்தப் பத்து ஆண்டுகளுக்கும் ஆங்கிலமும் இருக்கும் என்பது, அவர்களுக்குள்ளேயிருக்கும் சிக்கலிலிருந்து மீளவே ஒழிய, நமக்கு வசதி செய்யஅல்ல; நாம் விரும்புகிற கோரிக்கையை நிறைவேற்ற அல்ல.

இந்தி என்றுமே நமது அரசு மொழியாக ஆக இலாயக்கற்றது என்கிறோம், நாம்! தமிழகத்தின் அரசு மொழி—தமிழ். வெளி உலகத்தோடு தொடர்பு ஆங்கிலம். அதுபோதும், என்கிறோம், நாம்.

இல்லை! இல்லை! இந்தி எம்மொழி. ஆங்கிலம் இருந்த இடத்தில் இந்தி இருக்கட்டும் என்கிறார்கள், வடவர்.

இந்தியால் எப்படியய்யா வெளியுலகத்தோடு தொடர்பு கொள்ள முடியும் என்றால், நிசம் தான், அதற்கு இலாயக்கானது ஆங்கிலம் தான் என்றும் ஒப்புக் கொள்கிறார்கள்!!

அதே சமயத்தில், இந்தியாவில்ஆங்கிலம்படித்ததில்பேசத் தெரிந்தோர் தொகை ஒரே ஒரு சதவிகிதம் தான் தெரியுமா?—என்று வாதாடவும் வருகிறார்கள்.

ஒரே ஒரு சதவிகிதமாயிருக்கலாம்! ஆனால் தென் மாநிலங்களில் இந்தியைப் படித்துப் பேசத் தெரிந்தோர் .00000001 சதவீதம் கூட இருக்க மாட்டார்களே!!

அவர்களுக்கு என்ன பதில் சொல்கிறீர்கள், என்பது தானே நாம் கேட்கும் கேள்வி.

இதையே தானே இந்தியத் துணைக் கண்டத்தின் கவர்னர் ஜனரலாகயிருந்த ஆச்சாரியார் கேட்கிறார்!!

எதையும் காதில் போட்டுக் கொள்ளாமல் இந்தித் திணிப்புச் சட்டத்தை டில்லி, நிறைவேற்றி விட்டது.

அதேசமயம், திராவிடமுன்னேற்றக் கழகம் வாரி விடும் விடுதலைக் கோரிக்கையை, இந்தி நுழைப்பு வலுவாக்கி விடும் என்கிற பயம் காரணமாக, தனக்குப் பாதுகாப்பு வேண்டும் என்பதற்காக, அரசியல் சட்டத்தைத் திருத்தி பிரிவினை என்று கேட்பது சட்ட விரோதம் என்றும் பிரகடனப் படுத்தியிருக்கிறது.

இரண்டு சட்டங்களையும் ஒரே சமயத்தில் கொண்டு வந்து டில்லி நிறைவேற்றியிருப்பதன் சூட்சுமம். இது தான்.

வெறி பிடித்து அலைகிறது, டேல்லி! ஆனால், பாகுமொழிடிபசி பசப்பியபடியே, செய்கிறது காரியங்களை.

இந்தி வேண்டாம்! எம்தலையில் அந்த மொழியைப் புகுத்தும் உங்கள் தொடர்பே வேண்டாம்!! என்று வாதிடும் கழகத்துக்கு வாய்ப்பூட்டு போட்டு விட்டு தங்களது சர்வாதிகாரத்தை நடத்த டில்லி காரியங்களைச் செய்கிறது.

திட்டமிட்டு செய்கிறது! தீர்மானமாகச் செய்கிறது!!

இன்னும் 10 ஆண்டுகளில், எங்கும் இந்தி! எதற்கும் இந்தி!! எனும் நிலை வர வேண்டும் என்கிற ஆசையோடு செய்கிறது.

"எதிர் கால்த்தில் என்ன நடக்குமோ எனக்குத் தெரியாது. ஆனாலும், இந்த நேரத்தில், நாங்கள இதைத்தான் செய்யும் படியிருக்கிறது'',

(8-ம் பக்கம் பார்க்க)

தனிப்பட்டு இருந்ததால்!

°° °° °°

"இந்திய வரலாற்றுக்காலம் தோன்றிய நாள் தொட்டு வெள்ளையர் ஆட்சியேற்படும் வரையில் தமிழகம், இந்தியாவை ஆண்ட எந்தப் பேரரசாலும் ஆளப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது. இந்தியாவின் பெரும் பகுதியை ஒரு குடைகீழ் வைத்தாண்ட அசோகன் காலத்திலும் தமிழகம் தனியாட்சி புரிந்தது என்பதை அப்பேரரசன் வெளியிட்ட கல்வெட்டுக்களே தெரிவிக்கின்றன. இங்ஙனம் பல நூற்றாண்டுகளாகத் தனிப்பட்டு இருந்த தமிழகம் தனக்கென ஒரு மொழியையும் அதற்குரிய இலக்கியங்களையும் தனிப்பட்ட பண்பாட்டையும் வளர்த்து வந்தது..."

டாக்டர் இராசமாணிக்கனார் எம். ஒ. பி.எல்.

ஐயம்!

"சுதந்திரப் போராட்டத்திலீடுபட்ட இந்தியத் தலைவர்களிலே பலர் சோர்ந்து போய்விட்டனர். அவர்களிலெல்லாம் சோர்வடையாமலும், இந்தியாமுழுமைக்கும் தெரியக்கூடியவராகவும் இருப்பவர் பண்டிதநேரு ஒருவர்தான். அவருக்குப் பின் காங்கிரசின் கதி என்ன? இந்தியாவின் கதிதான் என்ன?......இந்தியா ஒன்றாகவே இருக்க முடியுமா என்றோர் ஐயம், இந்தியாவைக் கண்டதும் எனக்குப் பலமாகிறது. ஏனெனில், அவ்வளவு சங்கடமான நிலையில், பல பெரிய மொழிகள் உள்ளன. ஒவ்வொரு மொழியும் ஒரு கோடிக்கு மேற்பட்ட மக்களால் பேசப்பட்டு வருகிறது. இது மட்டுமல்ல தேசத்தைப் பிரிக்கவேண்டுமென்னும் கோரிக்கையும் வலுப்பெற்று வருகிறது.

அமெரிக்க ஜனாதிபதியாக போட்டியிட்ட

அட்லய்ஸ்டீவன்சன்

1953-ல் இந்தியாவைக் கண்ட பிறகு.

அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

ஒளி - 3 | 10-5-'63 | கதிர் - 9

ஒரே உடல்- இரு உள்ளம்!!

பக்தவத்சலனார் அவர்கள், இந்தி மொழி ஆட்சி மசோதாவுக்கு வரவேற்புரை வழங்கியதன் மூலம் மாறாத களங்கத்தைத் தேடிக் கொண்டு விட்டார்! அவரது காங்கிரஸ் மந்திரிசபை, தக்க சமயத்தில், தமிழகத்தின் குரலை எடுத்துச் சொல்லி வாதாடத் தவறிவிட்டது!!

காமராசரும் வாளாயிருந்துவிட்டார்—யாருமே, டில்லியினர்க்கு தமிழகத்தின் உள்ளத்தை, எடுத்துச் சொல்ல வேண்டுமென்று எண்ணவில்லை. மாறாக, வக்காலத்து வாங்கினார், நிதியமைச்சர். வரிந்து கட்டிக் கொண்டு, ஆட்சி மொழி மசோதாவை எதிர்த்தோரிடம், வம்புக்கு வந்தார். அதற்கு அவர் சொன்ன விளக்கம், "1965-ம் ஆண்டில் அரசியல் சட்டப்படி இந்தி மொழி மட்டுமே அரசுமொழியாக வேண்டும்- பிறகு ஆங்கிலம் இணைமொழியாக நீடிப்பதற்கு வழியில்லாமற்போய் விடும். அதை நீக்கவே இந்தச் சட்டம்" என்பதாகும்.

நாம் சொல்லும் பதில், "இந்தச் சட்டத்திலேயே அதற்கு வழி செய். இல்லையானால் அரசியல் சட்டத்தையே திருத்தி, இந்தி மட்டுமே ஆட்சிமொழியென்கிற பிரிவை நீக்கு", என்பதாகும்.

ஆங்கிலம் இணைமொழியாக நீடிக்க வேண்டும் என்கிற ஆசையிருந்தால் நிதியமைச்சர் இந்த யோசனையை எடுத்துச் சொல்லியிருக்கலாமே, டில்லிக்கு! மாறாக, நமக்குப் பதில் தேடத்தானே முனைந்தார்!!

ஆங்கிலம் இணைமொழியாக நீடிக்கும் என்று சொல்லப்படுகிறதே ஒழிய எதுவரை? இன்னும் ஒரு பத்தாண்டுக் காலத்துக்கு மட்டும்தான்! பிறகு........? பண்டித நேரு அவர்களே சொல்கிறார், "எப்படியும் நமக்கு ஒரு தேசியமொழி வேண்டும். அது இந்திதான்," என்பதாக.

பாகுமொழி கலந்து பாசம் பிழிந்து சொல்லப்படுகிறது பண்டிதர் அவர்களால், நமக்கென ஒரு தேசியமொழி வேண்டாமோ—எத்தனை நாளைக்கு இங்கிலீஷை வைத்துக்கொண்டு வாழ முடியும்—என்று! அவருடைய உள்ளமும், இந்தியின் பின்னால் போகிறதேயொழிய, மக்களின் மனநிலையை உணர்ந்து அதன்படி நடக்க முயற்சிக்கவில்லை!!

இந்தப் பத்தாண்டுக் காலத்தவணையும் எதற்கு? இந்தி மொழி, தன்னை அலங்கரித்துப் பூச்சூடி அனைவரும் ஏற்குமளவு வளரவாம்! அது வரையில், 'அடியே ஆங்கிலம் தாதி போல் கொஞ்சம் துணையிரு,' என்று சொல்லப்படுகிறதேயொழிய, வேறல்ல!

அரசியல் சட்டப்படி 1965-ல் இந்தி வந்துவிட்டால் எப்படி அரசாங்கம் நடக்க முடியும்? மத்திய ஆட்சியிலும் மாநிலங்களிலும் இருக்கும் அதிகாரிகள்—உத்யோகஸ்தர்கள்—மந்திரிமார்கள் ஆகியோரில் முக்கால்வாசிப்பேர், நாற்காலியைவிட்டுக் கீழே இறங்க வேண்டியதுதான்! அரசியல் சட்டப்படி இந்தி ஆட்சி மொழியாகிவிட்டால் சென்னைக் கோட்டையில், "ஹலோ, சார்!" என்கிற குரலைக் கேட்கமுடியாது, "அச்சா ஹை!" தான் கேட்கும். டில்லி எழுதும் தபாலைப் படிக்க இந்தி மொழிப்பெயர்ப்பாளர்களை இறக்குமதி செய்ய வேண்டியதுதான். காமராசர் ஒன்று சொல்லி வருகிறவன் ஒன்று எழுதினால், அது சரியா தவறா என்று கூட உணர முடியாது இவர்களால்! ஏனெனில் இவர்களுக்கும் இந்தி தெரியாதே!!

அதன் காரணமாக, இந்தத் தவணை ஆங்கிலத்துக்குத் தரப்பட்டிருக்கிறதே ஒழிய, என்றோ ஒரு நாள் இந்தி வந்து உட்காரத்தான் போகிறது. இதில் ஐயமில்லை! இருதயத்தைத் தடவிப் பார்த்தால் பக்தவத்சலனாருக்கேப் புரியும்.

மூன்றாவது வகுப்பு முதல், பள்ளிகளில் ஆங்கிலம் சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும் என்று இந்த ஆண்டு முதல் நடவடிக்கை எடுத்திருப்பது அவருடைய சோயனையால்தான்! ஆங்கிலம் அவசியம் என்பது, சட்டமன்றத்தில், அவருடைய வாதம். அதனாலேயே, கல்லூரிகளின் மொழியாகவும் தமிழிருக்க வேண்டும் என்ற தி. மு, க. கோரிக்கையை ஏற்க மறுத்தார். ஆனால், டில்லி சட்டம் கொணரும்போது, ஆங்கிலத்தின் அவசியத்தை எடுத்துரைக்கவில்லை! ஆரத்தி எடுக்க ஓடுகிறார் இந்திக்கு!!

இந்திதான் பத்தாண்டுகளுக்குப் பிறகு ஆட்சிமொழியாக வேண்டும் என்பது உறுதியாகத் தெரிந்துவிட்டதே. அந்த மசோதாவையும் வரவேற்று. எதிர்த்தவர்கள் வாயையும் மூடியாய் விட்டதே! அதற்குப் பிறகும் பள்ளிகளில் மூன்றாவது வகுப்பு முதல் ஆங்கிலமேயிருக்கவேண்டும் என்கிற கட்டாய உத்திரவு ஏன் இருக்க வேண்டும்? ஆங்கிலம்தான் பிடிக்காதே அமைச்சருக்கு! இந்திதானே நுழையும் இதயத்தில்! ஏன், தமிழகப்பள்ளிகளில், ஆங்கிலத்துக்கு இடம் தரவேண்டும்?

காரணம் அவருக்கேப் புரிகிறது—பிள்ளைக்குட்டிப் பேரன்மார்களைப் பெற்றெடுத்தவரல்லவா பக்தவத்சலம்—அதனால், தன் சந்ததியின்வாழ்வு பறிபோகாமலிருக்க வேண்டுமே என்கிற எண்ணத்தால், இங்குள்ள பள்ளிகளில் ஆங்கிலம் இருக்க வேண்டும்—அவினாசிலிங்கம் கல்வி மந்திரியாயிருந்தபோது தவறு செய்தார்—என்று, திருத்துகிறார்! ஆனால், தன் தலையிலுள்ள மந்திரிக் கிரீடம் நிலைக்க வேண்டுமல்லவா, அதற்காக டில்லிக்கு 'ததாஸ்து' போடுகிறார்!!

பத்தாண்டுகளுக்குப் பிறகு, எதெது, எப்படியெப்படி ஆகுமோ, யார் கண்டார்கள்! ஆனால், எப்போதும் ஆங்கிலம் மட்டும் உயிர் மொழியாக விளங்கும் எனும் கருத்து நிதியமைச்சரின் ஆழமான உள்ளத்தில் ஒளிந்து மறைந்திருக்கிறது!! அரசியல் வாதியல்லவா, அதனால் விட்டுக்கொடுக்காமல் சண்டைக்கு வருகிறார். ஆட்சி மொழி மசோதாவை வரவேற்கிறார்.

இரு நாக்கு! இரு உள்ளம்!!—கொண்டவர்களைக் காண முடியாது. ஆனால் நமது சரணாகதி மந்திரி சபையில் காணலாம். இருதயம் ஒன்று சொல்லும்! வாயொன்று பேசும்! நினைப்பொன்றிலிருக்கும்! குரல் ஒன்றைக் கொட்டும்!!

சென்ற இதழ் முகப்பு

உறுதிமொழி கொடுத்துப் பண்டிதநேரு அவர்கள் பத்திரிகைகளில் விளம்பரம் கொடுத்திருந்தார்களல்லவா? அந்த உறுதிமொழியை இப்போது குத்திக் கொலை செய்கிறார்கள் பிடிவாதக்காரர்கள் என்கிற பொருளிலேயே கடந்த இதழ் முகப்பு ஓவியம் போடப்பட்டது! டில்லியினர் நிறைவேற்றிய புதிய சட்டம் என்கிற கொடுவாள், அந்த உறுதிமொழியைப் புண்ணாக்கிவிட்டது, என்பதே அதன் பொருளாகும். ஓவியர், வாளின்மேல், "புதிய சட்டம்" என்று எழுத மறந்து விட்டார்! முகப்பைப் பாராட்டியும், விளக்கம் போட்டிருக்கலாம் என்றும் எழுதிய வாசகர்களுக்கு நன்றிகள்.

-ஆசிரியர்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சு சுதந்திரம் என்ருல், நீங்கள் மிக முக்கியமானது என்று கருதுகிற அடிப்படை பிரச்சினைகளில் கூட கருத்தைத் தெரிவிக்கும் சுதந்திரம் எங்களுக்குத் தரப்பட:வேண்டும்.

மேலே குறிப்பிட்ட தீர்ப்பு அமெரிக்க மேலுயர் நீதிமன்றத்தின் (சுப்ரீம்) முன்வந்த வழக்கில் தரப்பட்டதாகும். அந்த வழக்கு மிக முக்கியமான—நமது விவாதத்திற்கு ஏற்ற ஒரு பிரச்சினையில் எழுந்ததாகும், அமெரிக்கக் குடியரசுக்கூட்டாட்சியில் ஒரு பகுதியாக இருக்கிற மேற்கு வர்ஜினியா மாநிலத்து கல்வி நிர்வாகம் அந்த மாநிலத்து பள்ளிக்கூடங்களுக்கெல்லாம் ஒரு உத்திரவு போட்டிருந்தது. அதன்படி பள்ளிக்கூட மாணவர்களெல்லாம், அமெரிக்க கூட்டாட்சிக் கொடிக்கு வணக்கம் செலுத்தி கீழ்க்கண்ட உறுதிமொழியை எடுக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது.

"எல்லோருக்கும் சுதந்திரத்தையும் நீதியையும் வழங்குகிற அமெரிக்க குடியாட்சிக்கும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கொடிக்கும், அந்த கொடி சுட்டிக் காட்டுகிற பிரிக்க முடியாத ஒரே நாடான அமெரிக்க அமைப்புக்கும் நான் விசுவாசமாக இருப்பதாக உறுதிமொழி எடுத்துக் கொள்கிறேன்."

பள்ளி மாணவர்களுக்கு தேசபற்றையும் தேச ஒற்றுமையையும் பற்றி வலியுறுத்த இத்தகைய உறுதிமொழியை மேல் வர்ஜீனியா மாநிலத்தில் 1940-ல் கொண்டு வந்தார்கள். அப்பொழுது இரண்டாவஅ உலகப்போர் ஆரம்பமாகிவிட்டது. அமெரிக்காவும் மற்ற உலக நாடுகளும் சனநாயகத்தின் எதிர்காலத்தைப்பற்றி கலக்கம் மிக்க கண்களுடன் கவலைப்பட்டுக் கொண்டிருந்த காலம்: சனநாயகத்துக்கு வரவிருந்த பேராபத்தை எதிர்த்து பேராடும்பொழுது நாட்டு மக்களுக்கு நாட்டுபற்றை உறுதியான படி உணர்த்த வேண்டும் என கல்வி அதிகாரிகள் நினைத்ததில் தவறில்லை' மேலும் அமெரிக்க சுப்ரீம் கோர்ட் இந்த வழக்கை 1943-ல் விசாரணைச்கு எடுத்துக் கொண்டது. அப்பொழுது உலகப்போர் மத்தியில் அமெரிக்கா சிக்கியிருந்தது.

சூழ்நிலை எப்படியிருப்தால்கூட மேலே தரப்பட்ட உறுதிமொழி; தேசப்பற்றையும் தேசீய ஒற்றுமையையும் வளர்க்கிற ஒருசாதாரண உறுதி மொழி என்ருலும்கூட கட்டாயப்படுத்தி அப்படி ஒரு உறுதிமொழியை வாங்குவது சரியல்ல என்ற அமெரிக்க சுப்ரீம்கோர்ட் முடிவு செய்தது.

இந்தக் கட்டத்தில் புகழ்பெற்ற அமெரிக்க நீதிபதி ஹோம்ஸ் என்பவர் கூறிய ஒரு அறிவுரையை ஆளும் கட்சியினரின் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறேன். அவர் கூறினர்:

'காலப்போக்கில் பல மூர்க்கத்தனமான : நம்பிக்கைகள் நிலைமாறி வீழ்ந்திருக்கின்ற உண்மையை உணர்ந்ததால் சில பிரச்சினைகளில் அளவுக்கு மீறி நம்பிக்கைக் காட்டுபவர்கள் வேருெரு நம்பிக்கைக்கு மதிப்பளிக்க முன் வருவார்கள். அதாவது கருத்துக்களை சுதந்திரமாக நடமாட அனுமதிப்பது தான் நல்ல வழி. ஒருகருத்து மற்றும் பல கருத்துகளுடன் போட்டியிட்டு மக்கள் உள்ளத்தில் இடம் பெறுவதுதான் உண்மையைக் காண சிறந்த வழி' என்ற நம்பிக்கைக்கு அவர்கள் முன் வருவார்கள்.

கருத்துச் சந்தையில் உங்கள் கருத்துக்களையும் வைத்து, மற்ற கருத்துகளுடன் போட்டியிட்டு, மக்களின் மதிப்பைப் பெற ஏன் நீங்கள் முயலக்கூடாது? மக்களிடம் ஒரு கருத்தைத் திணிக்க சட்டமெனும் நீண்ட இரும்புக் கரத்தை ஏன்:நீட்டிப் பார்க்கிறீர்கள்

சனநாயகத்தில் உங்களுக்கு நம்பிக்கையிருப்தால் மக்களிடம் உங்களுக்கு நம்பிக்கையிருந்தால் உங்களிடமேஉங்களுக்கு நம்பிக்கையிருந்தால் ஏன் உங்களுக்குத் துணிவு இல்லை!

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் முதற் பாராளுமன்ற கூட்டத்தைத் துவக்கியபொழுது அந்த நாட்டுக்கு விடுதலைலாங்கித் தந்த தலைவர்களில் ஒருவரும் அமெரிக்க நாட்டு அரசியல் சட்ட்த் தந்தையுமாக விளங்கிய தாமஸ் ஜெபர்சன் என்பவர் பின்வருமாறு கூறினர்,

இங்குள்ள பிரதிநிதிகளில் யாராவது இந்த நாடு பிரிக்கப் பட வேண்டும், இந்த ஆட்சிமுறை மாற்றியமைக்கப்படவேண்டும்' என்று கூறினல் அவர்களை நாம் சுதந்திரமாக அனுமதிக்க வேண்டும். மாறுபட்ட கருத்துக்கு நாம் அளிக்கும் மதிப்பின் அடையாளச் சின்னங்களாக அவர்கள் விளங்கட்டும். முடிவான தீர்ப்பை மக்களின் பகுத்தறியும் ஆற்றலுக்கு விட்டுவிடலாம்."

(11-ம் பக்கம் பார்க்க)

கிளி-
நாய்-
கழுதை

இச்சைக்கேற்ற பச்சைக்கிளி!

எங்கேயாவது சென்ற வீட்டுக்காரன், திரும்பி வந்து வாசலில் அடியெடுத்து வைத்தால், கீச்! கீச்! சென்று கூவும்.

அவனும் கிளியை எடுத்து தடவி கொடுத்துப் பாலும் பழமும் தந்து பிறகு கூட்டில் விடுவான்.

அவன் வீட்டில் ஒரு கழுதை இருந்தது! பொதி சுமக்கும் வேலை அதற்கு!! கிளியை எடுத்து அவன் கொஞ்சுவதைப் பார்க்கப் பார்க்க, அதற்குப் பொருமை.

ஒரு நாள், வீட்டுக்காரன், வந்து கொண்டிருந்தான். கிளியைப்போல தானும் வரவேற்க எண்ணித் தன் குரல் திறந்து கத்தியது. கீச்! கீச்!சென்று இனிமையாக கத்துவதாக அதற்கு நினைப்பு. ஆனல், அதன் கொடூரத்தைக் கேட்பவர்கள்தானே உணர முடியும்? வீட்டுக்காரனல் பொறுக்க முடியவில்லை. கையிலிருந்த தடியால் ஓங்கி இரண்டு போட்டான்.

அவன் வீட்டில் நாயொன்றுண்டு!

அவன் வந்ததும் ஓடும்; பிராண்டும். அவனுடைய அறைக்குள்போய்த் தாவும். அவனும் ஆசையோடு தட்டிக் கொடுப்பான். இரவில், அவனுக்கு நல்லபாதுகாப்பு, அந்நாய், அதனல், அதன்மீது அவனுக்குப் பிரியம்.

கிளியைக் கொஞ்சுகிருன்! நாயைத் தடவிக் கொடுக்கிருன்! நம்மை மட்டும்......?—என்று எண்ணிய கழுதைக்ஈ விசித்திரமான யோசனை உதித்தது.

நாமும் நாயைபமபால் வாலையாட்ட வேண்டும், எசமானருகில் போய்ச் சீண்ட வேண்டும். விளையாட வேண்டும், அப்போது தன் எசமானுக்கு நம்மீது அளவு கடந்த ஆசை பிறக்கும் என்று எண்ணியது.

ஒருநாள் களைத்துப் போய் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தான் வீட்டுக்காரன்! கழுதை நைசாக அவன் அறைக்குள் புகுந்தது. கால்களை அவன்மேல் போட்டது. வாயால் அவனை நக்கியது. மேலே படுத்துப் புரள ஆரம்பித்தது.

வீட்டுக்காரன் பயந்துபோய், "அய்யோ! அய்யோ!" என்று கத்தினன். கழுதையை உதைத்தனர். நாலு காலையும் கட்டினர். பைத்தியம் பிடித்துவிட்டது என்று கருதி அந்த ஊர் ஆற்றிலே கொண்டுபோட்டனர்.

[கிளி எது? நாய் எது? கழுதை எது?]

வாசகர்களே, யூகித்துக் கொள்ளட்டும் (ஆ-ர்)

எங்கே போனர் டி. டி. கே.

இருபத்தைந்தாண்டு காலமாவது 'கெடு' வேண்டும் அதுவரையில் ஆங்கிலத்தின் இடத்தை அகற்றுவது ஆபத்து என்ருர் 1955-ல் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார். டில்லியில் இப்போது அவர் மந்திரி. சட்டம் கொட்ட வருகிறது நம்மை! என்ன செய்கிருர்? என்ன செய்தார்?

[பிரெஞ்சுப் புரட்சி — அரசியல்வாதிகள் மட்டுமல்ல, அனைவரும் அறிந்து கொள்ள வேண்டிய முக்கிய சரிதம்! கடந்த 11 இதழ்களில் அது உருப்பெற்ற வகையும் வழியும் தரப்பட்டிருந்தது. சிங்காரபுரியினரை எதிர்த்துச் சிம்மம் எனக் கிளம்பிய ஏழையர்தம் திருக்கூட்டம் பொல்லாத 'பாஸ்டிலி'யைப் பொடி பொடியாக்கியது. பிரபுக்கள் உல்லாச விருந்துகளில் திளைத்தபோது தின்ன 'ரொட்டி! ரொட்டி!' என்று பஞ்சைகள் அலறினர். பஞ்சைகள் பட்டாளம் மன்னனை நோக்கிப் பவனி சென்று கொண்டிருந்த கட்டம் வரை 'அறப்போரி'ல் இதுவரை வந்தது. இனி...............]

பஞ்சையர் பட்டாளம்! செல்கிறது பவனி! வீரம் உமிழும் கண்கள்! வேங்கையின் வேகம்! பட்டாளம் செல்கிறது. டட, டட, டட என்று முரசு கொட்டியபடி! ஊர்வலத்தில் சென்ற ஆண்கள், பெண்கள் அத்தனை பேரிடத்திலும் ஏதாவது ஒரு ஆயுதம் இருந்தது. சிலரிடம் துப்பாக்கிகள், பலரிடம் இரும்புத் தடிகள்— கத்திகள்—தடிகள்! சில பெண்கள் சமயற்கட்டில் காய்கறிகள் நறுக்கப் பயன்படும் கத்திகளோடு வந்தனர்! விவசாயப் பெண்களின் கரங்களிலே வித விதமான பொருள்கள் எல்லாம் கருவிகளாயிருந்தன.

நண்பகலில் ஊர்வலம் வெர்சேல்ஸ் நகரை அடைந்தது, அப்போது தேசிய சபை (நேஷனல் அசெம்பிளி) அங்கே நடந்து கொண்டிருந்தது, ஊர்வலத்தின் தலைவர்கள் நேராக அங்கே சென்றனர். வாசலில் அவர்களை விட மறுத்தார்கள். அதையும் மீறிக் கொண்டு கொண்டுநுழைந்த இத்தலைவர்களைக் கண்ட சட்டசபைப் பிரதிநிதிகள் திகைத்தனர், அப்போது சபையில் "மனித உரிமைகளின் சாசனத்தில்" என்னென்ன வார்த்தைகளைப் போட்டு எழுதுவது என்பதுபற்றி காரசாரமான சர்ச்சைநடந்துகொண்டிருந்தது!! "உங்கள் மனித உரிமைகளைச் சாக்கடையில் போடுங்கள்—உடனே எம் வயிற்றுப் பசிக்கு ரொட்டி கிடைக்க வழி செய்யுங்கள்" என்று கூவி வந்த மக்களைக் கண்டதும், மக்களுடைய குரலுக்குப் பூரண முக்கியத்துவம் கொடுப்பதற்காக அந்த விவாதத்தை ஒத்தி வைத்தனர்.

இவ்வளவு ரகளையும் நடைபெறும்போது மன்னன் என்ன செய்து கொண்டிருந்தான் தெரியுமோ? என்ன ஆகுமோ? எப்படியாகுமோ, என்ன பதில் சொல்வது என்றெல்லாம் மந்திரிமார்களுடன் ஆலோசனை செய்துகொண்டிருந்திருப்பான் என்றே எண்ணத் தோன்றும்! மன்னன், பிரெஞ்சு லூயி யாச்சே! அப்படி செய்வானு!! அழகாகக் காட்டில் வேட்டையாடிக் கொண்டிருந்தான்.

மக்கள் அவனை வேட்டையாட வந்துகொண்டிருந்தார்கள்! அவனே, காட்டில் வேட்டையாடிக் களித்துக் கொண்டிருந்தான்.

அந்த இன்பத்தோடு அவன் அரண்மனைக்குள் நுழையத் திரும்பியபோது, வெர்சேல்ஸ்

அரங்கண்ணல்

நகரத்தின் வீதிகளில் பாரிஸ் மாநகரின்பட்டினிப்பட்டாளம் கூட்டம் கூட்டமாக நிற்பது, அவனுடைய கண்களில் பட்டது. அரசனிடம், ஊர்வலம் வந்த மக்கள், ஐந்து பெண் மணிகளைத் தங்களின் பிரதிநிதிகளாக அனுப்பினர்,

கந்தலாடையும்,கசங்கியஉடலும்,பசித்தவயிறும்,கொதித்த குரலுமாக வந்த ஐந்து பஞ்சைகளையும் பார்வேந்தன் புன்சிரிப்போடு வரவேற்றான்! அழுத கண்களோடு சென்ற அம்மாதர் செப்பினர், "அரசே ரொட்டி வேண்டும். அதைக் கேட்கவே உங்களிடம் வந்தோம்", என்று. "அப்படியா எல்லோருக்கும் உணவு கிடைக்கச் சீக்கிரம் ஏற்பாடு செய்யலாம். கவலைப்படேல்", என்டம் காலணிக்குக் காசேது?

நள்ளிரவு நெருங்கிக் கொண்டிருந்தது. கடுமையான மழை முன் மன்னன். அடிவயிறு கொதிக்க வருவோருக்கு அரச பீடத்திலிருப்போர், "ஆகட்டும் பார்க்கலாம்!" என்று சொல்லித் தட்டிக் கழிக்கும் இராசதந்திரம் அப்போதே இருந்திருக்கிறது!!

அரசனின் "ஆகட்டும் பார்க்கலாம்!" என்கிற சொல்லைப் பதிலாகப் பெற்ற பஞ்சைகள், தலை வணங்கினர், அரசனின் இருப்பிடத்தை விட்டு மரியாதையாக வெளியே வந்தனர். அரசனும் மிரட்டவில்லை; அவர்களும் மிரட்டவில்லை. காய்கறி விற்கும் அந்தப் பெண் மணிகள் மிக மிக மரியாதையோடு நடந்துகொண்டனர். அரசனைக் காணச்சென்ற அப்பெண்கள், சீமாட்டிகளைப் போலத் தங்களது கந்தலாடைகளை இரு கைகளாலும் கொஞ்சம் தூக்கிப் பிடித்த வண்ணம் சென்றனர். கந்தலுக்குரியவன் இந்தக் காவலன் தானே என்று நினைக்கவில்லை! காலணிகள் இல்லாத கால்களை மேனுட்டில் காண முடியாது. ஆனால், சென்ற அந்த ஐந்து ஜீவன்களின் கால்களும் வெறும் கால்களாகத் தானிருந்தன! ரொட்டிக்கே வழியற்றவர்களி வேறு. லாபேயட்டே நகருக்குள் குதிரையில் கம்பீரமாக வந்து சேர்ந்தான். அவனுடைய தேசியப் படை (நேஷனல் கார்டு)யின் உதவியோடு, வெர்சேல்சின் நாலு பக்கங்களிலும் நடந்து கொண்டிருந்த கொள்ளைகளை அடக்கினன். குழுமி வந்த மக்கள் சும்மா யில்லை! கொத்தும்பசி அவர்களைப் பலவிதங்களில் பாயச் சொல்லிற்று. எங்கெங்கே என்னென்ன கிடைத்ததோ அதையெல்லாம் புகுந்து விருப்பம் போல் உண்டனர்; அள்ளினர். ஓரளவுக்கு அவனது வருகையால் இந்தக் கலவரங்கள் நின்றன. அரசனிடம் சென்றான். அரச குடும்பத்தின் பாதுகாப்புக்காகத் தான் எடுத்திருக்கும் நடவடிக்கைகளை விளக்கி 'சபாஷ்' பட்டம் பெறுவதற்காகச் சென்றான்.

"அவசரப்படக் கூடாது. இதனை நாம் அமைதியாகச் சமாளிக்க வேண்டும்", என்று லாபேயட்டே, அரசனிடம் சொன்னார். ஆனல், அரசனின் கூடயிருந்தவர்கள் முளையிலேயே கிள்ள வேண்டும் இதை விடக்கூடாது. இராணுவத்தை அனுப்பிப் பாரிஸ் வரையில் துரத்தியடிக்க வேண்டும்", என்றனர். வழக்கமான மெத மெதப்புடன் மன்னன் குழம்பினன். கடைசியில் லாபேயட்டேயின் மொழிப்படி நடப்பதே சரியென்கிற முடிவுக்கு வந்தான். "இரத்தம் ஒரு சொட்டுக் கூட சிந்தக்கூடாது. ஆணை! ஆணை!", என்று தன் மெய்க் காப்பாளர்களுக்கு உத்திரவிட்டு விட்டு, மன்னன் படுக்கைக்குச் சென்றான். ஆனல் நடந்தது என்ன!! அடுத்த வாரம் காண்போம்.

(தொடரும்)

தனித்தமிழ்!

தமிழ், இலக்கியம் எதையும் சார்ந்திருப்பதன்று. கலாச்சார உபயோகத்தில் தனித்து இயங்கவல்லது.

இந்திய இலக்கியங்கள் பற்றித் தென் இந்தியாவிலிருந்தே அதுவும் திராவிடர்கள் மூலம் முக்கியமாகத் தமிழ், மலையாளம் பேசும் மக்கள் மூலம்தான் ஐரோப்பாவில் அறிய முடிந்தது,

17-வது 16-வது நூற்றாண்டில் தமிழ் சம்ஸ்கிருதத்தைவிட அதிகம் முன்னேறி இருந்தது.

தமிழ்மொழி தவிர மற்றமொழிகளெல்லாம் சம்ஸ்கிருதக் கலப்புடையன.

—பிலியோஜத்
(பிரெஞ்சு நாட்டு அறிஞர்)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

என்கிருர் நேரு.

மொழியைத் தலையில் சுமத்துகின்ற எந்த அரசையும், பாதிக்கப்பட்ட மக்கள் நீண்ட காலத்துக்கு விட்டு வைத்திருந்ததாகச் சரித்திரம் இல்லை.

எதிர்காலம்நமது கண்ணுக்கு மிகமிக நன்ருகத் தெரிகிறது!!

நாம் கோரும் பிரிவினையை இன்னும் ஐந்தாண்டுகளுக்குப் பிறகு நம்மை எதிர்ப்பவர்களே, நிச்சயம் கேட்பார்கள்! நாடே, கேட்கும்!!

நமது கோரிக்கையை அழிப்பதாக நினைத்து, அதற்கு வலியூட்டும் ஆதிக்கத் தர்பாரான நடவடிக்கையை இந்திய அரசு, எடுத்துக் கொள்கிறது.

இப்படியொரு நாள் வர நாளாகும் என்று எண்ணினேம்! அழியும் ஆதிக்கங்களுக்கு எப்போதும் அவசரமும் பரபரப்பும் ஏற்படும் என்பார்கள். அந்த உண்மை டில்லியின் போக்கில் பளிச்சிடுகிறது.

நியாய வாதங்கள் அதன் எதிரில் செல்லுபடியாகவில்லை,

பிடிவாதமே, டில்லியின், கருத்துக்களை ஆட்டிப் படைக்கிறது.

நியாய வாதியாகயிருப்பார் நேரு என்று நம்பினேம்!

அவரும், அந்தப் பிடிவாதத்துக்கு ஆளாகி விட்டார்.

தென் மாநிலங்களின் எதிர்காலத்துக்குச் சவால் விட்டு விட்டு லால்பகதூர் சாஸ்திரியார் கழகத்தைச் சவாலுக்கு அழைக்கிருர்.

காலம் கனியும்!- என்று காத்திருந்த கழகத்தின் கைகளில் காலத்தைத் தூக்கிக் கொடுத்திருக்கிறது, டில்லி.

இந்தியத் துணைக் கண்டத்தின் எதிர்காலத் தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பு தெற்கில் வளர்ந்து வரும் திராவிடமுன்னேற்றக் கழகத்திடம் இருக்கிறது என்கிற உண்மையை இன்று, தன் சட்டங்கள் மூலம், உலகுக்குச் சொல்கிறது டில்லி!!

கொடுமையோடு நமக்கு வழங்கப்படும் நற்பிரசாதம் தவிர வேறென்ன, இது.

கொடுமைகள் அம்புகள் போலப் பாயப் பாயத்தான் மக்கள் மத்தியில் விழிப்பு பிறக்கும். அந்த விழிப்புக்கு வித்திட்டு, நீர் பாய்ச்சி, வேக வேகமாக வளரவும் வழி செய்கிறது, டில்லி.

மறைமுகமாக நம் கொள்கையை நாடே ஏற்றுத் திரள வழியமைக்கிறது டில்லி. நாம் என்ன செய்யப் போகிறேம் என்பதில் தான் நாட்டின் எதிர்காலம் இருக்கிறது.

அக்கிரமங்களைத் தட்டிக் கேட்டிருக்கிருர்கள் நம்மவர்கள், பார்லிமெண்டில்.

திறமையாக, அருமையாக, கேட்டிருக்கிருர்கள் பார்லிமெண்டில்.

அன்போடு, ஆத்திரத்தோடு, கனிவோடு, கடுமையோடெல்லாம் விளக்கம் தந்திருக்கிருர்கள் பார்லிமெண்டில்.

எந்தக் கொள்கையின் அடிப்படையில் அவர்கள் அங்கே சென்ருர்களோ, அந்தக் கொள்கையை ஆணித்தரமாகவும், ஆதாரங்களோடும் அள்ளி யள்ளி வைத்திருக்கிருர்கள்.

அதற்குப் பிறகும் சட்டங்கள் கொஞ்சங் கூட மாருமல் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன!!

பிறகு, ஜனநாயகத்திலுள்ள ஒரே வழியென்ன? மக்கள் மன்றத்திடம் நமது நியாயங்களைச் சமர்ப்பித்து, பிடிவாதமான அரசின் காதைப் பிடித்துத் திருகுவது தான்!!

காலம், வந்து விட்டது
அரும்பு மலர்ந்து விட்டது
தியாக தினம் நெருங்கிறது
கடமை நம்மை நோக்கி வருகிறது
எதிர்பாராத விதத்திலேயே
எல்லாம் வருகிறது!!

இன்றில்லா விட்டாலும், எதிர்காலச் சரித்திர ஆசிரியர்கள் டில்லியின் மற்ருேரு "துக்ளக் தர்பார்"., என்று நிச்சயம் எழுதுவார்கள்.

சாயும் சர்வாதிகாரங்களுக்கு அவசரமும் ஆர்ப்பாட்டமும்கூட பிறந்தவைகள் போலும்! கழகம் வெல்ல, அவர்களே வழிகாட்டுகிருர்கள்!!

பெண்ணே! கணவன் உன்னைக் காதலிப்பதை விட நீ அவனைக் காதலிப்பது அதிகமாக இருக்கட்டும்; அப்பொழுது தான் நீ அவனுடைய இருதயத்தை அரசாள முடியும்.

இன்று ஒரு சபதம் செய்வோம் எந்த நாளும் காப்போம்

ஆக்கிரமிப்பாளரை விரட்டி அடிப்போம் என்ற நமமுடைய சபதத்தை மீண்டும் இன்று உறுதிப் படுத்திக்கொள்வோம். விழிப்புடனும் உறுதியுடனும் ஆயுத்தங்கள் செய்வோம். இப்பொழுதே வேண்டியதை செய்வோம். தேசீய சேவைப் பணியில் சேவை புரிய முன்வருவோம ● வீண் செலவுகளைக் குறைத்துக் கொள்வோம ● உணவும் உடையும மதிப்பிட முடியாத மதிப்பு வாய்ந்தது. ஓரளவும் வீணாககவேண்டாம ● காலமும், நேரமும்கூட மிக முக்கியம். ஒரு நிமிஷமும் சுமமா இருககவேண்டாம் ● உங்கள் பொறுப்புகளை நிறைவேற்றுங்கள் எப்பொழுதும் எலலா விஷயங்களிலும் ஒழுங்கு முறையை கையாளவோம

தேசம் எழும்போது தேர்ந்து எழுங்கள்



DA 62/F5

நடந்த கதை

சிரித்துப் பேசிக் கொண்டு படுக்கச் சென்ற டாக்டர் காலையில் கததிக் குத்தோடு பிணமாகிக் கட்டிலில் கிடந்தார். ஊரெல்லாம் ஒரே பேச்சு. ஒரே ஒரு தங்கையைத் தவிர அவருக்கு உற்றார் உறவினர் கிடையாது. அண்ணனின் சாவு கண்டு அலறித் துடித்தாள் இன்னும் திருமணமாகாத அத் தங்கை.

போலீசார் வரவழைக்கப் பட்டனர். புலன் ஏதும் தென் படவில்லை. பிரபல கைரேகை நிபுணர் சுவரூப் தருவிக்கப் பட்டார். கட்டிலிருந்த மேலுறையில் இரத்தம் கொட்டிக் கிடந்தது. அங்கே பதிந்திருந்த கைவிரல்களை அடையாளம்எடுக்குமாறு போலீசார் கோரினர். சுவரூப் சோதித்தார் போலீசார் கொண்ட சந்தேகம் உறுதியாகி விட்டது. 'அந்தக் கொலைகாரனை'க் கைது செய்ய ஆளனுப்பினர்.

ஃ

பிரிக்லால் கம்பெனியொன்றில் நல்ல சம்பளத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்த வாலிபன். அடிக்கடி டாக்டரீ வீட்டுக்கு வருவான். அவனுக்கும் டாக்டரின் தங்கை உமாவுக்கும் 'காதல்' வளர்ந்தது. டாக்டர் கூட இருவருக்கும் திருமண முடிக்க மனம் ஒப்பியிருந்தார். ஆனுல், திடீரென ஒரு வாரத்துக்கு முன்பு அவனை வீட்டுக்கு வர வேண்டாம் என்று தடுத்து விட்டார். அதோடு சீக்கிரம் தன் தங்கைக்குக் கலியாணம் செய்ய வேறு இடங்களில் மாப்பிள்ளை பார்க்கவும் ஆரம்பித்தார். போலீசாருக்கு 'இத்துப்பு' கிடைத்ததும் அவர்கள் பிரிச்லால் மீது சந்தேகம் கொண்டனர். கட்டிலில் கிடைத்த கைரேகையோடு அவனது—கைரேகையையும் எடுத்து ஒப்பிட்டனர். இரண்டும் ஒன்ருயிருந்தது! வேறென்ன சான்று வேண்டும்? பிரிச்லால் தான் டாக்டர் கமலகாந்தனைக் கொன்றிருக்க வேண்டும் என்று முடிவு கட்டினர்.

உமாவால் போலீசார் முடிவை ஏற்க முடியவில்லை! பிரிச்லால் அப்படிப் பட்டவனல்ல என்பது அவளுக்குத் தெரியும். ஆனுல் கைரேகை காட்டிக் கொடுக்கிறதே! எதுவும் சொல்ல முடியாமல் மென்று விழுங்கினுள், உமா. பிரிச்லாலோ காவலில் வைக்கப் பட்டான் வழக்கும் தொடரப் பட்டது.

2

கோஷ் என்று கையெழுத்திட்டு உமாவுக்கு ஒரு கடிதம் வந்திருந்தது. உடனடியாகத் தன்னை வந்து சந்திக்குமாறு அக்கடிதத்தில் குறிப்பிடப் பட்டிருந்தது! மிகமுக்கியமான சேதி என்றும் எழுதப் பட்டிருந்தது. கோஷ், அந்த வட்டாரத்திலேயே பிரசித்தி பெற்ற கிரிமினல் வக்கீல். பிரிச்லாலுக்காக அவர் தான் அமர்த்தப்பட்டிருந்தார். அதனுல் பரக்கப் பரக்க உமா அவரிடம் சென்ருள். சிறையில் பிரிச்லாலைப் பார்த்ததாகவும் அவன் சொன்ன சில சேதிகள் புதிய உருவங்களாக முளைத்துள்ளன வென்றும், அது பற்றிய சில அந்தரங்க உண்மைகளை அறியவே அவளை அழைத்ததாகவும் சொன்னுர்.

வக்கீலின் வாதம் ஓர் விளக்கு! சாவுத் தகையிலிருந்து பலரை அது காப்பாற்றிவிடும்.

இரண்டு மணி நேரம் அவளைப் பல கேள்விகள் கேட்டு குறித்து வைத்துக் கொண்டார்.

வழக்கு ஆரம்பமாயிற்று! சர்க்கார் தரப்பில் பல சாட்சிகள் விசாரிக்கப் பட்டனர். உமாவுக்கும் பிரிச்லாலுக்குமிருந்த காதல் — கலியாண முடிவு — கமலகாந்தன் மறுத்தது—தனக்குப் பிறகு எல்லாச் சொத்தும் தன் தங்கைக்கே சேருமென்று டாக்டர் எழுதி வைத்திருந்த விபரம்- டாக்டர் படுக்கின்ற இடம்- அது பிரிக்லாலுக்கு நன்ருகத் தெரியும் என்கிற தகவல்-எல்லாவற்றையும் சாட்சிகள் விளக்கமாகச் சொன்னுர்கள். முத்தாய்ப்பு வைப்பது போல ரேகை நிபுணர் சுவரூப் சாட்சியம் இருந்தது. கொலையுண்டவரின் படுக்கையில் கிடந்த 'பெட்ஷிட்'டிலிருத்த இரத்தக் கறை படிந்த கைரேகை மிகத் தெளிவாக யிருந்ததாகவும், குற்றம் சாட்டப் பட்டவனின் கை ரேகை அதோடு நூற்றுக்கு நூறு ஒத்து இருப்பதாகவும், தெளிவாகத் திடமாகச் சொன்னுர். லினன் துணியாலான பெட்ஷீட் சாட்சிப் பொதுராய் வைக்கப்பட்டிருந்தது. வேறென்ன வேண்டும்? காதலுக்காக மாபெரும் காதகம் செய்திருக்கிருன் இக் கயவன் என்கிற முடிவுக்கு எல்லோரும் வந்து விட்டனர்.

ஆனுல், அவன் வக்கீல் கோஷ் மட்டுமே அவன் நிரபராதி யென்று திடமாக நம்பினுர்!

3

எதிரியின் சார்பில் டாக்டர் வீட்டுக் கிழ வேலைக்காரனை மட்டும் கோஷ் விசாரித்தார். அடுத்த, சாட்சியாக ரேகை நிபுணா சுவரூப்பை அழைத்தார், கோஷ்.

கே:- மிஸ்டர் சுவரூப்! நீரும் டாக்டரும் நண்பர்கள். அடிக்கடி அவர் வீட்டுக்கு நீரும் போவதுண்டு......

ப:- ஆம்...

கே:- உமக்கும் டாகடருக்குமிடையிலே சுமுகமான நட்பு இருந்ததல்லவா...

ப:- இருந்தது. என்னைப் பார்த்து ஏன் இதையெல்லாம் கேட்க வேண்டும்.

கே:- ஊம்! கொஞ்ச காலத்துக்கு முன்பு உமாவைக் கல்யாணம் செய்து கொடுக்கும்படி டாக்டரை நீர் கேட்டதுண்டா.

ப:- கேட்டேன். அவர் சம்மதிக்கவில்லை.

கே:- இல்லை! பிரிச்லாலுக்கும் உமாவுக்கும் கலியாணம் செய்ய இருப்பதாக டாக்டர் உம்மிடம் தெரிவித்தார்...

ப:- அப்படி சொன்னதாகத் தான் ஞாபகம்...

கே:- சில நாள் கழித்து ஒரு நாள் டாக்டரிடம், பிரிச்லால் ஒரு மட்டமான வீட்டுக்கு ராத்திரி வேலையில் சென்று வருவதாக நீர் சொன்னதுண்டல்லவா?

ப:- பிரிச்லால் யோக்கியனல்ல என்று சொன்னேனே ஒழிய எந்த வீட்டுக்குப் போகிருன் என்கிற மாதிரியில் சொல்லவில்லை. எனக்கு எப்படி அந்த வீடுகள் தெரியும்....

கே:- நீர் சொன்னதை டாக்டர் நம்பினுர்....

ப:- அவர் நம்பாவிருக்கக் காரணமில்லை.

கே:- கொலை நடப்பதற்கு ஒரு வாரத்துக்கு முன்பு இது நடந்தது.

ப:- இருக்கலாம்!

கே:- சரி! கைரேகை நிபுணரான நீர் பல பேருடைய கை ரேகைகளையும் பதிவு செய்து ஒப்பிட்டுப் பார்த்து ஆராய்ச்சி நடத்துவதுண்டல்லவா?

ப:- என் தொழிலில் முன்னேற நான் அதெல்லாம் செய்வேன்....

கே:- சில மாதங்களுக்கு முன்பு அப்படி ஆராய்ச்சி நடத்துவதற்காக பிரிச்லாலுடைய கைரேகைகளையும் பதிய வைத்துப் பிரதி யெடுத்தது உண்டா? இல்லையா!

இந்தக் கேள்வியை அவர் கேட்டதும் கோர்ட்டுக்குள்ளே

இந்தியா !? வேண்டாம்!

(இரா. வேங்கடபதி)

இமயம் போல் பீடுயர்ந்த தமிழ் இருக்க—இந்தி
இட்ட பொடி மணற்குன்று தேவை இல்லை
இமை மூடா ஒளிக்கண்கள் தமிழ் இருக்க—இந்தி
இடர் செய்யும் ரணப்புண்கள் தேவை இல்லை
சமைத்திட்ட நல்விருந்து தமிழ் இருக்க—இந்தி
சதிசெய்யும் கொல்மருந்து தேவையில்லை
எமை வளர்க்கும் பூஞ்சோலை தமிழ்இருக்க—இந்தி
எமையடைக்கும் சிறைச்சாலை தேவை இல்லை

மலரல்லிக் குளிர்ப்பொய்கை தமிழ் இருக்க—இந்தி
மணங்கெட்ட வெறுங்குட்டைத் தேவை இல்லை
புலர்காலை இளங்கதிராம் தமிழ் இருக்க—இந்தி
புலையிருட்டுப் பெரும்'பூதம்' தேவையில்லை
நலஞ்சார்ந்த கலைப்பேறு தமிழ் இருக்க—இந்தி
நலிவூட்டும் கொலைக்கருவி தேவை இல்லை
பலம் வாய்ந்த தோளெங்கள் தமிழ் இருக்க—இந்தி
பகைக்கவரும் தேள் கொடுக்கு தேவை இல்லை!

யே ஒரு பரபரப்பு உருவாயிற்று. சாட்சியின் முகம் கூட மாறியது.

ப:- பிரிச்லால் விரும்பினார், செய்தேன்....

கே:- ஊம்! இறந்து போன டாக்டரிடம் நீர் அடிக்கடி கைமாற்றாக 2000 ரூபாய் வரையில் வாங்கியிருக்கிறீர்....

ப:- ஆமாம்....

கே:- திருப்பிக் கொடுக்கவில்லை....

ப:- கொடுக்கத் தான் இருந்தேன்....

கே:- ஆமாமாம்! நீர் கொடுக்கத் தான் இருந்திருப்பீர். இரண்டாயிரம் ரூபாயில் நூறு இருநூறாவது திருப்பிக் கொடுத்ததுண்டா....

ப:- இல்லை...,

கே:- கடைசியாக ஒரே ஒரு கேள்வி! கொலை நடந்த இரவு நீர் எங்கே இருந்தீர்?

ப:- என் வீட்டில்! என் நண்பர்களிடமெல்லாம் டெலிபோனில் நீண்ட நேரம் அன்று பேசிக் கொண்டிருந்திருக்கிறேன்..,,

கே:- சரி! நீர் இறங்கலாம்.,.. கடைசியாக இன்னும் ஒரே ஒரு சாட்சி யென்று சொல்லி போலீஸ் நிபுணர் ஒருவரைக் கூண்டிலேற்றினார் கோஷ்.

வக்:-டாக்டருடையபடுக்கையிலிருந்த பெருவிரல் ரேகையும் குற்றஞ் சாட்டப் பட்டுள்ளவரின் பெருவிரல் ரேகையும் ஒன்றாகயிருக்கின்றன வல்லவா?

ப:- ஆமாம்! அப்படித் தான் இருக்கின்றன. ஒரு ரேகையைப் போல இன்னொருத்தர் ரேகையிருக்காது. இந்த அடிப்படையில் தான் எங்களால் குற்றங்களை எளிதில் கண்டு பிடிக்க முடிகிறது. ரேகைகள் ஒன்றுக்கொன்று ஒரே மாதிரி யிருக்காது என்பது உலகம் ஒப்புக் கொண்ட உண்மை. இதில் தவறு ஏற்பட முடியாது.

கே:- கொஞ்சம்என்னுடைய பெருவிரலை அடையாளம் எடுத்துக் கொள்ளுங்கள்....

நிபுணர் ஒரு கண்ணாடி 'ஸ்லைடை' நீட்டினார். அதன் மீது வக்கீல் தன் பெருவிரலை அழுத்தினார்.

கே:- இந்த அடையாளமும் குற்றஞ் சாட்டப்பட்டவனின் பெருவிரல் அடையாளமும் ஒன்றாகத் தெரிகிறதா?

ப:- நிச்சயமாக இல்லை. இரண்டுக்குமுள்ள வித்தியாசத்தை, பார்த்ததுமே யாரும் சொல்லி விடலாம். இது உங்களுடைய பெருவிரல் அடையாளம்.

சரி என்று ஒப்பிய டாக்டர், நிபுணரைப் பார்த்து 'இன்னொரு கண்ணாடி ஸ்லைடைக் கொடுங்கள்' என்று கேட்டார். அந்த ஸ்லைடை வாங்கிக் கொஞ்சம் மேசைக்குக் கீழே கொண்டு போய் விட்டு மறுபடியும் நிபுணரிடம் திருப்பிக் கொடுத்தார்.

வக்:- இந்த அடையாளம் எப்படியிருக்கிறது.

ப:- முதலில் கொடுத்த உங்கள் பெருவிரல் அடையாளம் போல இது இல்லை!

சிரித்துக் கொண்டார் கோஷ். இன்னொரு ஸ்லைடைக் கேட்டு வாங்கினார். திருப்பிப் போலீஸ் நிபுணரிடம் கொடுக்கும் போது,'' கவனம்! கவனம்! இந்த ஸ்லைடு உங்களிடமிருந்து நழுவாமல் பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள்...'' என்றார்.

மூன்றாவது ஸ்லைடைக் கையிலே வாங்கிய போலீஸ் நிபுணரின் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன! துருவித் துருவிப் பார்த்தார்.

கே:- இந்த ஸ்லைடில் உள்ள அடையாளம் குற்றம் சாட்டப்பட்டவரின் பெருவிரல் அடையாளம் போலத் தானே உள்ளது?

ப:- ஆமாம்! அப்படியே இருக்கிறது. என்று திகைப்போடு பதில் தந்தார் நிபுணர்.

கே:-......ஆனால் குற்றம் சாட்டப்பட்டவரோ ஸ்லைடில் அடையாள மிடவில்லை அங்கே குற்றவாளிக் கூண்டிலேயே நிற்கிறார்.

ப:- ஆமாம்! அது தான் எனக்குப் புரியவில்லை. உங்களால் எப்படி இதைப் பெற முடிந்தது.

கே:- மந்திரமல்ல! விபரம் சொல்கிறேன்... என்று கோர்ட்டாரைப் பார்த்துச் சொன்னார்

''யுவர்லார்ட்ஷிப் அண்ட் ஜென்டில்மென் ஆப் தி ஜூ!ரி'', என்று கம்பீரத்தோடு தொடங்கினார் வக்கீல்,'' கொலையுண்ட டாக்டரின் படுக்கையிலிருந்த குற்றஞ் சாட்டப் பட்டவரின் பெருவிரல் அடையாளத்தால் என் கட்சிக்காரர் மீது குற்றம் சுமத்தப் பட்டது. பெருவிரல் அடையாளம் அவருடையது என்பதை நான் மறுக்கவில்லை. அவருடையது தான்! நிச்சயமாக அவருடையது தான்...''

வாதாட வந்த தன் கட்சிக்காரனுக்கு விரோதமாகப் போகிறதே வாதம் என்று எல்லோரும் திகைத்தனர். திகைப்பை அதிகமாக்குவது போலக் கொஞ்ச நேரம் நிறுத்தினார் வக்கீல்.

''ஆமாம்! குற்றம் சாட்டப் பட்டவருடைய அடையாளம் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் ஒன்று! கொலையுண்டவரின் படுக்கையில் கிடைத்த அடையாளம் அவரால் ஏற்பட்டதல்ல. படுக்கையின் அருகேகூட அவர் செல்லவில்லை, ஒருவருடைய ரேகையைப் போல இன்னொருவருடையது இருக்காது என்கிற உண்மையை நான் மறுக்கவில்லை. அப்படியானால் எப்படி அந்த அடையாளம்—அதுவும் இரத்தக் கறையோடு—இருக்க முடிந்தது? சுவரூப் பல்லாண்டுகளாக கைரேகைகளைப் பற்றிய ஆராய்ச்சியிலீடுபட்டிருந்தவர். பல வழக்குகளில் அவருடைய ஆராய்ச்சித் திறன் பலன் தந்திருக்கிறது. அவ்வளவு பெரிய கெட்டிக்காரர் அவர். நான்கூட என் கட்சிக்காரருடைய உயிர் 'கைரேகை'யின் காரணமாக ஊசலாடுகிறது என்று அறிந்ததும் சுவரூப்பைத் தான் நாடினேன்.... மிஸ்டர் சுவரூப் கைரேகைகளைப் பரிசீலிப்பதோடு நின்றுவிடவில்லை! ரேகைகள் உள்ள பல தரப்பட்ட விரல்களைப் பற்றியும்கூட ஆராய்ச்சிகள் நடத்தியிருக்கிறார். அவர் என்னிடம் சொல்லவில்லை! ஆனால், பலமாதிரியான கைகளைப் பற்றியும் அவருக்கு தெரிந்திருக்கும் என்று நான் யூகித்தேன். சில மாதங்களுக்கு முன் என் கட்சிக்காரருடைய கையின் பிரதியை, அவர் எடுத்திருக்கிறார். அப்போது பெருவிரல் அடையாள மட்டுமே சரியாக விழுந்திருக்கிறது.. அவர் எப்படிச் செய்தாரோ அதே போலத் தான் நானும் முதலில் இரண்டு ஸ்லைடுகளில் அடையாளம் எடுத்து நிபுணரிடம் கொடுத்தேன். மூன்றாவது ஸ்லைடில், நான் எடுத்து வைத்திருந்த என் கட்சிக்காரருடைய கையின் அடையாளத்தை ஒத்திக் கொடுத்தேன். இது அங்கேயிருக்கிறது உங்கள் பார்வைக்கு! அப்படியானால், டாக்டருடைய படுக்கையில். நான் இப்போது செய்தது போல, அந்த இரத்ததில் என் கட்சிககாரருடைய கை ரேகைப் பதிப்பை வைத்து அங்கே அதில் பிரதி விழும்படிச் செய்தது யார்? யார்?'' என்று உரத்த குரலில் கேட்டார். யார் என்பது எல்லோருக்கும் புரிந்து விட்டது! எல்லோரையும் விட சுவரூப் ஏற்கனவே புரிந்து கொண்டு விட்டான்! கோர்ட்டில் உட்கார்ந்திருந்த அவனருகில் போலீசார் சென்று நின்று கொண்டனர். 'தடால்' என ஒரு சப்தம்.உட்கார்ந்த படியே சுருண்டு விழுந்தான். டாக்டர்! கள் அழைக்கப் பட்டனர்'' ''ஜட்ரோசைனிக் ஆசிட்..''' டை உட் கொண்டதால் உடனே இறந்திருக்கிறான் என்றனர். வழக்கு தள்ளப் பட்டது! வக்கீல் சிரித்தார். உமாவும் பிரிச்லாலும் சிரிக்கவில்லை; நான்கு கைகளால் வக்கீலைக் கும்பிட்டனர்.

இந்தி-கள்ளிக்காடு !

(சா. ராமானுசம்)

இந்தியா என்பதோர் நாடு—என்ற
எண்ணத்தில் வந்ததிக் கேடு
நம்தமிழ் மொழி எழில்வீடு—இந்தி
நலந்தரா மாகள்ளிக்காடு
வந்தது, இன்றது, ஓடு—இந்தி
வருகின்ற வழியெல்லாம் மூடு
பந்தென அதையெண்ணி ஆடு—இந்தி
பறந்திட வடக்கினைச்சாடு.

பள்ளியில் கட்டாயம் வேண்டும்—என்ற
பல்லவி கேட்குது மீண்டும்
துள்ளியே எழுந்து நாம் ஈண்டும்—இந்தி
தொலைந்திட வழிசெய்வோம் யாண்டும்
மாண்டது அத்திட்டம் என்று—முன்னர்
மகிழ்வோடு இருந்திட நன்று
மீண்டது வருகுது இன்று—வாரீர்
மீறுவோம் போரிட்டு வென்று

தாண்ட வமாடுது இந்தி—அஞ்சல்
தலைகளில் சொகுசாகக் குந்தி
வேண்டாத பொதுமொழி மந்தி—அதை
விரட்டிடுவோம் அனைவரும் முந்தி
ஈண்டவர் மரித்திட வரினும்—அதை
எத்தனை வகைகள் தரினும்
மாண்டவர் பிழைத்திடப் போமோ—இந்தி
மறுமுறை நுழைந்திட ஆமோ?

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

"பேச்சின் மூலம் பழி தூற்ருமலும், ஏமாற்ருமல், சட்டத்துக்குப் புறம்பான மற்ற காரியங்களை செய்யாமல் ஒருவன் பேச உரிமையிருக்கிறது. மனதில் பட்டதைக் கூற, மற்றவர்களுக்கு விளக்கிக் காட்ட, எழுச்சியூட்ட ஒவ்வொருவருக்கும் உரிமை இருக்கிறது பேச்சுரிமையை தவருகப் பயன்படுத்திஞல் அன்றி தான் பேசியதற்கு மன்னிப்புக் கோரவோ, சமாதானம் தரவோ, ஒருவனுக்கு அவசியமில்லை.........பேச்சுரிமை—என்ன நேரிட்டாலும் சரி அதை நாம் விட்டுக் கொடுக்கமாட்டோம்.

இந்தக் குறிப்பு பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் 1922 மே மாதம் 22-ம் தேதி அலகாபாத் உயர்நீதி மன்றத்தில் தந்த அறிக்கையில் ஒரு பகுதியாகும்.

1928-இல் வருங்கால இந்திய அரசியல் சட்டம் எப்படியிருக்கவேண்டுமென்று ஒரு அறிக்கை தயாரித்தபொழுது அதில் பண்டித நேரு அவர்கள் கூறியிருக்கிருர்.

"அரசியல் சட்டத்தில் வைக்கப்படும் அடிப்படை உரிமைகள் எக்காரணத்தைக் கொண்டும் எந்த காலத்திலும் குறைக்கப்படாமல் பாதுகாப்புத் தருவதுதான் நமது முதல் கடமையாக இருக்க வேண்டும்."

1945 ஜுலை 17-ஆம் தேதி காஷ்மீரத்தின் ஸ்ரீநகரின் கபூர்தாலா தோட்டமைதானத்தில், பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் பின்வருமாறு பேசிஞர்.

இந்தியாவில் ஒரு பகுதியை மற்ரெரு பகுதியை அடக்கியாள்வதற்காக நாங்கள் சுதந்திரம் கேட்கவில்லை; இந்தியாவின் பொருளாதார நிலைமை முன்னேறவேண்டும் என்பதற்குத்தான் சுதந்திரம் கேட்கிருேம். இந்தியாவிலுள்ள ஏதாவது ஒரு பகுதி பிரிந்துபேபக விரும்பிஞல். அப்படிப் போகவேண்டாமென்று காங்கிரஸ் கேட்டுக் கொள்ளும். இந்தியாவை விட்டுப் பிரிந்துதான் போவோம் என்று கண்டிப்பாக இருந்தால் அவ்வாறு போவதைக் காங்கிரஸ் அனுமதிக்கும்."

பெருபாரி பிரச்சினையை கவனிக்கலாம். இந்திய அமைப்பிலிருந்த பெருபாரி பிரித்து பாகிஸ்தானத்துக்குத் தரப்பட்டது. பிரிவினை என்பது செயலில் நிறைவேற்றப்பட்டது. பிரிக்கப்பட்டது எட்டரை சதுர மைல் பரப்பா, 85000 சதுர மைல் பரப்பா என்பது அல்ல முக்கியமானது! பிரிவினை என்பது பிரிவினைதான்! பெருபாரி பிரிவினை—நேரு அரசாங்கத்தாரால் செயலில் காட்டப்பட்ட பிரிவினை!

பெருபாரி பிரச்சினை சுப்ரீம் கோர்ட் ஆலோசனைக்கு அனுப்பப்பட்டது. அப்பொழுது சுப்ரீம் கோர்ட் தந்த தீர்ப்பில் ஒரு முக்கிய பகுதி இருக்கிறது.

"முழு முதல் அதிகாரம் என்ருல், அதற்கு தன் ஆதிக்கத்திலிருக்கும் நிலப்பகுதியைப் பிரித்துக் கொடுக்கும் உரிமையும் இருக்கிறது."

மேலும் சுப்ரீம் கோர்ட் ஒரு உண்மையை வெளியிட்டது. முழுமுதல் அதிகாரம் என்பதற்கு, இருக்கும் நிலப்பகுதியுடன் கூடுதலாக வேரெரு பகுதியைச் சேர்க்கவும், இருக்கும் நிலப் பகுதியிலிருந்து ஒரு பகுதியை பிரிக்கவும் ஆன உரிமைகள் இருப்பது உலகறிந்தஉண்மை!

சுப்ரீம் கோர்ட் தீர்ப்புப்படி முழு முதல் அதிகாரம் என்பதுடன் சேர்ப்பதும், பிரிப்பதும் அடங்கியிருக்கின்றன. முழு முதல் அதிகாரம் பற்றிப் பேசுவதால், அதற்குட்பட்ட பிரிவினை பற்றியும் பேசுவதற்காகவே பொருள்படும். ஆக, முழுமுதல் அதிகாரம் பற்றிப் பேசுவது சரியென்ருல், பிரிவினை பற்றிப் பேசுவதும் சரியானதே! இந்தக் கருத்தை கனம் சட்டமந்திரி கவனித்துப் பார்ப்பார் என்று கருதுகிறேன்.

'பல தரப்பட்ட அம்சங்களைக் கொண்ட இந்தியாவில் எது தேவை என்ருல் ஒருவரையொருவர் நன்கு தெரிந்து கொள்ளுதல், ஒருவருக்கொருவர் மதிப்புத் தருதல், ஒருவருடனெருவர் சகிப்புத் தன்மையுடன் பழகுதல்! எது தேவையில்லையென்ருல் ஒருமைப்பாடு என்ற பேச்சு! பல்வேறு வகைகளைக் கொண்ட இங்கு, ஒருமைப்பம்டு என்ற பேச்சு அபத்தமானது, அர்தத மற்றது.

" இந்திய அரசியல் சட்டம், கூட்டாட்சி அடிப்படையில் உருவாக்கப்பட்டது என்பதே வட்டாரங்கள் பல இருக்கின்றன என்ற உண்மையைஒத்துக் கொண்டதாகும். உலகத்தில் உள்ள பல நாடுகளைவிட நிலப்பரப்பில், பெரிய வட்டாரங்கள் பல இந்தியாவில் இருக்கின்றன. அவற்றுக்கென தனிப்பட்ட நீண்ட வரலாறும் பழம் பெருமையிம் இருக்கின்றன. வட்டாரங்களின் தனித்தனிமையையும் தேவைகளையும் ஒத்துக்கொண்டாலொழிய ஒற்றுமை என்ற பேச்சு அறிவுத் தெளிவுடையவரின் பேச்சு அல்ல! வட்டாரங்கள் இருப்பது சனநாயக ஆட்சியின் முக்கிய பண்பாகும் என்று நான் கருதுகிறேன்.

ஒருமைப்பாடு என்பது அபத்தமானது, அர்த்தமற்றது என்ருல் அந்த 'ஒருமைப்பாடு' முயற்சிக்காகக் கொண்டு வரப்படும் ஒரு மசோதா எவ்வளவு அபத்தமானது; அர்த்தமற்றது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

" மத்திய அரசாங்கத்திற்கு அரசியல் விவேகமிருந்தால் தி. மு. க. காட்டிய நல்லெண்ணத்தையும் ஒத்துழைப்பையும் ஏற்று நல்லமுறையில் பயன்படுத்தியிருக்க வேண்டும்.

"தன்னை பலப்படுத்திக் கொண்டுள்ள அவசரகால நிலைமையையும் அதிகாரத்தையும் காங்கிரசுக் கட்சிப் பயன் படுத்துகிறது என்ற சந்தேகம் பலருக்கும் உண்டாக ஆரம்பித்துள்ளது. எதிர்க்கட்சிகள் செல்வாக்கு பெற்றுவிடுமேர என்ற அச்சத்தில், எதிர்க்கட்சிகளுக்கெதிராக அரசியல் பலத்தை வளர்த்துக் கொள்ள காங்கிரசுக் கட்சி அவசரகால நிலைமையைக் கருவியாகக் கொண்டுள்ளது.



இல்லற வாழ்க்கையில் பலஹீனமா?

வாலிபப் பருவத்திலே வயோதிகத் தன்மையா?

உடலில்பலக்குறைவு சக்தி குறைவா?

அப்படி இருந்தால் நீங்கள் இனி கவலைப்படத் தேவையில்லை.

பிரபல சித்த வைத்தியர்

டாக்டர் எஸ். ஆர். சிவராஜ்

அவர்களின் தயாரிப்புகளான

'சிவராஜ்'	ராஜாமிர்தம்	(காலை, மாலை உள்ளுக்கு)
'சிவராஜ்'	ராஜ்பில்ஸ்	(காலை, மாலை உள்ளுக்கு)
'சிவராஜ்'	தாமரைத் தைலம்	(ஸ்நானத்திற்கு)
சிவராஜ்'	லேபனத்தைலம்	(மேல்பூச்சு)

இவைகளைத் தொடர்ந்து சாப்பிட்டு இழந்து போன சக்தியை மீண்டும் பெற்று வாழ்க்கையில் புத்துணர்ச்சி பெறலாம்.

1 மாதம் உபயோகிக்கும் மருந்துகள்
4-ம் சேர்ந்தது ரூ. 23-00

(தபால் செலவு ரூ. 2-50 தனி)

விபரங்களுக்கு தொடர்பு கொள்க:

சிவராஜ் சித்த ஆயுர்வேத வைத்தியசாலை

சிவதாபுரம் அஞ்சல் :: சேலம்-2

கேள்வி பதில்

கே: இந்தித் திணிப்பை எதிர்க்க'மறியல்', 'அறப்போர்' என்றெல்லாம் செய்த தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. ம. பொ. சி. இப்போது டில்லி கொண்டு வந்துள்ள இந்தித் திணிப்பை எதிர்க்காததோடு, திராவிட முன்னேற்ற கழகம் ஆங்கிலத்துக்காக வாதாடுகிறது, அதனால் நான் எதிர்க்கிறேன் என்றெல்லாம் பேசுகிருரே! உங்கள் கருத்தென்ன?

பி. எஸ். கோவிந்தசாமி
மந்தவெளி

ப: ம. பொ. சி. அவர்களின் நிலைக்காக நான் மிகவும் இரக்கப்படுகிறேன். "நான் ராஜ்யசபையில் இருக்க வேண்டுமென்ற எண்ணம் தான் அண்ணுதுரையின் தமிழ்நாடு பற்றியபேச்சைக் கேட்டதும் எனக்கு ஏற்பட்டது," என்று ஒரு பேட்டியில் சொல்லியிருக்கிருர், அவர். அவருடையஎண்ணம் இப்போது நொந்து போனவர் நிலையில் உள்ளது! அதனல் ஏதேதோ பேசுகிருர். அவருடைய அறிக்கைகள் தெளிவில்லாத குழப்ப மூட்டைகளாக உள்ளன, நாடு அதையெல்லாம் கவனிக்கின்ற கட்டத்தில் இல்லையென்ருலும் சிறு துரும்பானுலும் திரண்டுவரும் இந்தி வெள்ளத்தை எதிர்க்கப் பயன்பட வேண்டும் என்பது தான் நம் கருத்து, மாநிலத்தில் தமிழ் ஆட்சி மொழி பயிற்சி மொழியாக இருக்க வேண்டும் என்பதற்காக நாங்கள் எல்லாம் சட்டசபையில் வாதிட்டு வெளியேற்றம் கூடச் செய்தோம்! உலகப் பொது மொழியான ஆங்கிலம் "பிற" இடங்களில் பழகப்போதும் என்பதே நம் கருத்து. திராவிடம் அமைத்தால் கூட தொடர்புமொழியாக ஆங்கிலமே இருக்கலாம். அது பற்றி பிறகு உருவாகும் திராவிடக் கூட்டாட்சியின் பகுதிகள் முடிவெடுக்கும் என்ருலும் எமது தனிப்பட்ட கருத்து இது தான்! தாய் மொழி உயிருக்குச் சமம்; பிறவெல்லாம் சாதன மொழிகள்தான், எது உலக முழுமைக்கும் எளிதான சாதன மொழியாக உலவுகிறதோ அதில் பாண்டித்யம் பெற்று சிறப்பதே போதுமானது. ம. பொ, சி. கொம்புக்கு அலைகிருர் பிடித்துத் தொங்க! முருங்கைக் கொம்புபோன்றவைகளே அவருக்குக் கிடைப்பது காலக் கொடுமையல்ல; அவருடைய கருத்துப் பிற்போக்கின் விளைவாகும்!

ஃ

கே: இந்தியை எதிர்த்து போர் கொடி தூக்கும் வேளையில் ஆச்சாரியார் என்ன செய்வார்?

அங்கமுத்து
ஈரோடு

ப: கடற்கரையில் அந்தக் கிழவரின் துணிவான வார்த்தைகளைக் கேட்டபோது எனக்கே வியப்பாயிருந்தது. ஒரு துணைக் கண்டத்தின் கவர்னர் ஜெனரலாகயிருந்தவரே சிறைக்குள் தள்ளப் பட்டார் என்கிற அதிசயம் உலகுக்கே கிடைத்தாலும் வியப்பில்லை!!

ஃ

கே: "போராட்டம் நடத்துவார்களாம். நடத்தட்டும், நான் கவனித்துக் கொள்கிறேன்," என்று முதலமைச்சர் காமராசர் பேசினராமே ஒரு கூட்டத்தில்.........?

சுல்தான்
அக்கிப்பேட்டை

ப: இதே இருமாப்பில்தான் இன்று இந்தியை எதிர்க்கும் ஆச்சாரியாரும் ஒரு காலத்தில் பேசினர்! ஆட்சியிலிருப்வர்களுக்கு—அதுவும் முதலமைச்சர்களாயிருப்பவர்களுக்கு—இருமாப்பை விடப் பேச்சில் பொறுப்பு நிதானமும் இருக்க வேண்டும். "வா ஒரு கை பார்க்கிறேன்", என்று சொல்ல பயில்வான்களே போதும், பண்பும் விவகாரமும் தெரிந்தவர்கள் தேவையில்லை, நாட்டை யாள பயில்வானுசிருர் போலும் காமராசர். தனி ஒரு மனிதர் நாட்டை எதிர்த்து நின்று வென்றதாகச் சரித்திரமே கிடையாது!

ஃ

கே: இந்தி எதிர்ப்பில் ஆதித்தனர் கட்சி என்ன செய்யப்போகிறது......?

சோமு
கழந்தம்பாடி

ப: ......பரபரப்பாகப் பத்திரிகை விற்பனையை அதிகரிக்க என்ன செய்யலாம் என்று யோசிக்கும்!

ஃ

கே: முன்னள் தளபதி ஜெனரல் கரியப்பாவேபண்டித நேருவின் அறிக்கையைக் கண்டிருக்கிருரே......

ஆதிமூலம்
பெங்களூர்

ப: இந்தித்திணிக்கப்பட்டால் இந்நாள் இராணுவவீரர்கள் நிலைமைகூட சங்கடமாகிவிடும்! என்னமோ வெறியில் இப்படியெல்லாம் செய்கிறதே ஒழிய கொஞ்சங்கூட நிதானமும் பொறுமையும் இல்லை டில்லி பீடத்துக்கு.

ஃ

கே: ஆங்கிலத்தின் மீது உங்களுக்கேன் இவ்வளவுமோகம்...?

'தமிழன்'
காரைக்குடி

ப: ரோஜாவின் மீது ஏன் ஆசை வருகிறது எல்லோருக்கும்!

பெண் என்பவள் பலமற்றவள். வாழ்க்கை யென்னும் கொந்தளிக்கும் கடலில் அவள் தன்னந்தனியாகப் பிரயாணம் செய்யமுடியாது அவளுக்கு உணவும் உடையும் சுகமும் கொடுத்து ஆதரிக்க, அவளிடம் அன்பு செலுத்தி, அவளது சுக துக்கங்களைத் தன் சொந்தச் சுக துக்கங்களாகப் பாவிக்க, பயங்கள் இன்னல்களிலிருந்தெல்லாம் அவளைப் பாதுகாக்க, தேவை ஏற்படும் போதெல்லாம் அவளுக்கு ஆறுதல் தர, ஒரு ஆண் மகன் அவசியமாகிருன். அவனது அந்த உதவிகளுக்குப் பதிலாக இளமைக் களஞ்சியமாய் விளங்கும் தன்னையே அவள் பரிசாக அளிக்கிருள்.

பிரிண்டிங்,
பைண்டிங்
சகல
அச்சுவேலைகளுக்கும்

அசோகன்
பிரிண்டர்ஸ்

★ விரைவில் ஆரம்பம்!! உரிமையாளர்: அரங்கண்ணல் ★

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இராம. அரங்கண்ணல், 9-ஏ, சர். சி.பி. ராமசாமி ரோடு, அபிராமபுரம், சென்னை-18,
அச்சிட்டோர்: எம். பி. சத்தியமூர்த்தி, முல்லை அச்சகம், 8-40, மவுண்ட்ரோடு, சென்னை-6